3 JUN 1932

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௰] பிரஜோத்பத்தி வரு மாசிமீ [பகுதி-௪.
Vol. XXX. February–March–1932. No. 4.

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| ...திர்மலர்மாலை:— | ஸ்ரீமத். நவநீதகிருஷ்ணபாரதியார். | அக |
| ...தொல்காப்பியத்து அகத்திணையியலின் 19-ம் சூத்திரம்:— | ,, P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் (M A Ph. D.L.T.) | கூ௫ |
| ...வணமஞ்சரி:— | ,, த. இராமநாதபிள்ளை, B A. | கஎ |
| ...துரை மும்மணிக் கோவை:— | ,, மஹாமஹோபாத்யாய-தாக்ஷிணாத்ய கலாநிதி-Dr. வே சாமிநாதையர் | 17-32 |
| ...நருநைமான்மியம்:- | T K இராமாநுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர் | 49–64 |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1932.

...u RAJA M DINAKARA BAHADUR AVL., and
THIRU. NARAYANA IYENGAR, at the
...r Press, No. 54, New Jail Road Madura.

21528

## வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

13 JUN 1932

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩0] பிரஜோத்பத்தி ஹு மாசிமீ [பகுதி-௪.
Vol. XXX February March-1932. No. 4.

## உதிர் மலர் மாலை.

நவநீதகிருஷ்ண பாரதி எழுதியது.

[வெளியீட்டுரிமை எழுதியோர்க்கே யுரியது.]

### (1) புறநானூற் றுரையாசிரியரும் P. S. சுப்பிரமணிய சாஸ்திரிகளும்.

“கடுங்கண்ண” என்னும் பதினான்காம்புறப்பாட்டின் விசேடவுரையிலே ‘உண்டென்பது பொதுவினையன்றேனும் கறியொழிந்தவற்றிற் கெல்லாஞ்சேறலின், பன்மைபற்றி அமைத்துக்கொள்ளப்படும்; ஊன்றுவை கறியோடுகூடிய சோற்றை உண்டென அமைப்பினும் அமையும்; இதனைப் பொதுவினையென் றுரைப்பாருமுளர்’ என்று கூறிப்போந்தார் புறநானூற் றுரையாசிரியர்.

“ஊன்றுவை கறிசோறுண்டு” என்பது பொதுவினையாகாது என்றவர் இளம்பூரணர்; உண்டலென்பது உண்பன தின்பனவெனப் பிரித்துக்கூறும்வழிச் சிறப்புவினையாம். பசிப்பிணிதீர நுகரப்படும்பொருளெல்லாம் உணவெனப்படுமாகலிற் பொதுவினையுமாம். கறியொழிந்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டற்றொழி லுரித்தாகலிற் பன்மைபற்றிக் கூறினாரெனினு மமையும் என்றவர் சேனாவரையர். கறிசோறுண்டு என்றவழி உண்டு என ஒருவினையால் வந்ததால் எனின் அது பொதுவினை எனக் கொள்க என்றவர் தெய்வச்சிலையார். உண்டென்பதனைப் பேராசிரியரும் பொதுவினை எனக் கொண்டார்.

இவ் வுரைவிகற்பம் பலவற்றையு முட்கொண்டவராய், "'புறநானூற்றுரைகாரர் உண்டென்பது பொதுவினையன்றேனும் கரியொழிக்கவற்றிற்கெல்லாஞ் சேறலின் பன்மைபற்றி அமைத்துக்கொள்ளப்படும். இதனைப் பொதுவினை என்பாருமுளர்' என்றனர். இவற்றை நோக்கின் புறநானூற்றுரைகாரருக்கு உண்டல் என்பதை இளம்பூரணர்போல் பொதுவினையாகாதெனக் கொள்ளாது சேனாவரையர்போல் பன்மைபற்றியவழக்கால் அமைப்பதே கருத்தென்பதும் தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் இவ்விருவர்போலப் பொதுவினையாகக் கொள்ளுதல் தம் கருத்தன்றென்பதும் விளங்குகின்றன. ஆதலின் இவர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் காலத்திற்குப் பிற்பட்டவர்போலும்" என்று திருவாளர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் கூறினார்கள். [செந்தமிழ். தொகுதி 29. பக்கம் ௯௪.]

பேராசிரியரும் "உண்டு" என்பதைப் பொதுவினை என்றே கொண்டிருக்கவும் அதனை நோக்காது சாஸ்திரியாரவர்கள் புறநானூற்றுரையாசிரியரை நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவரென்று கூறுதல் பொருந்துமா என்பது ஆராயத்தக்கது.

### புறநானூற்றுரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும்.

"ஆவுமானியல்" என்னும் ஒன்பதாம் புறப்பாட்டின் விசேடவுரையிலே யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீரும் உடைமையால், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று; அன்றி முன்னீரென்றோதி நிலத்திற்கு முன்னாகிய நீரென்றுரைப்ப என்று முந்நீர் என்பதற்குப் பொருள் கொண்டார்.

முந்நீரென்பதற்கு நிலத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்தலுமாகிய மூன்றுதொழிலுடைமையின் முந்நீர் ஆகுபெயர் என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

"முந்நீர்-கடல்; ஆகுபெயர். ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றாகலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதியநீரெனின், 'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்' அதுவும் மேனீரன்றி அமையாமையின் ஆகாது; ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின் முச்செய்கை யுடையநீர் முந்நீர் என்பது; முச்செய்கைகளாவன மண்ணைப் படைத்தலும், மண்ணை யழித்தலும், மண்ணைக் காத்தலுமாம்" என்றார் அடியார்க்குநல்லார். [சிலப். ௧௭. ஆய்ச் ௧.]



முந்நீர் என்பது ஆற்றுநீர் முதலிய மூவகை நீருடையதென்ற வரும் முன்னீரென ஓதக்கூறினும் புறநானூற்றுரையாசிரியராதலின் இவர் அடியார்க்குநல்லாரான் மறுக்கப்பட்டவராவர் என்பது கண்டுப் போதருதலின் புறநானூற்றுரையாசிரியர்க்குக் காலத்தாற் பிந்தியவராவர் அடியார்க்குநல்லார் என்பது நிலைபெறும்.

### அடியார்க்குநல்லார்காலம்.

நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருத்தல்பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது என்று தமிழ்மடவாலின் செவிலித்தாயாகிய ப்ரம்மஸ்ரீ Dr. உ. வே. சாமிநாதையரவர்கள் கூறினார்கள் (சிலப். அடியார்க்குநல்லார் வரலாறு).

ஐயரவர்கள்கூற்றுப்படி அடியார்க்குநல்லார்க்கு நச்சினார்க்கினியர் பிற்பட்டவரென்பது வலியுறுகின்றது. முந்நீர் என்பதற்குப் புறநானூற்றுரையாசிரியர் கண்டபொருளை அடியார்க்குநல்லார் மறுக்கின்றாராதலின் அடியார்க்குநல்லார்க்குப் புறநானூற்றுரையாசிரியர் காலத்தான் முற்பட்டவர் என்பது வலியுறுகின்றது. இங்ஙனம் ஆசிரியர்கள் காலம் வலியுறலால் சாஸ்திரியாரவர்கள், நச்சினார்க்கினியார்க்குப் புறநானூற்றுரையாசிரியரைப் பிந்தியவராக்கியதுபோலாது பேராசிரியருக்குப் பிந்தியவராக்குதலே சாலப்பொருத்தமாம்.

### (2) சிலப்பதிகாரத்து அரும்பதவுரையாசிரியரும் புறநானூற்றுரைகாரரும்.

"அரையிருள்யாமத்துப் பகலுந் துஞ்சார்" (சிலப்- அந்தி- ௮௧.) பகுக்கப்படுதலின், பகல், மதுரைக்காஞ்சியில் "மற்றை யாமம் பகலுறக் கழிப்பி" என்பது மது. பகலுந் துஞ்சார—எல்லாருந் துஞ்சும அரையிருள்யாமத்தும் ஒருமாத்திரைப்பொழுதுந் துஞ்சாமல்' என்றார் அரும்பதவுரையாசிரியர்.

'அரையிருளினும் ஓர் யாமத்தினும் அரையாமத்தினும் ஒருகணப் பொழுதும் துஞ்சாரம்படி .... .... .... "நடுநாள்யாமத்தும் பகலுந் துஞ்சான்" என்றார் புறத்தினும். .... .... .... அரையிருள்-இரண்டாம் யாமம். யாமம் ஓர்யாமம்; அரையிருள்யாமம்-உம்மைத்தொகை; இருபெயர்க்கண்வந்தது. பகல்-அரையாமம். 'மற்றை யாமம் பகலுறக் கழிப்பி' என்றார் மதுரைக்காஞ்சியுள்ளும். பகுத்தலிற் பகலாயிற்று என்றார் அடியார்க்குநல்லார்.

"நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்"

இடையாமத்தும் நண்பகலுந் துயிலானாய். .... .... .... பகலை ஒருமாத்திரை என்றும் .... .... .... உரைப்பாரும் உளரென்றார் புறநானூற்றுரையாசிரியர்.

பகலென்பதற்கு ஒருமாத்திரை எனப் பொருள்கண்டவர் சிலப்பதிகாரத் தரும்பதவுரையாசிரியராதலின் இவர்க்குக் காலத்தாற் பிந்தியவராவர் புறநானூற்றுரையாசிரியரென்பது வலியுறும்.

(3) பேராசிரியரும், மணக்குடவரும், பரிமேலழகரும்.

தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியலிலே இருபத்தைந்தாஞ் சூத்திரவுரையிலே,

'வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு."

என்புழிக் கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென்பாகலின், என்று இத்திருக்குறளை மேற்கோள்காட்டிக் கற்றறிதலை இரண்டாகப் பகுப்பர் என்று பிறன்கோளுங் கூறினார் ஆத்திரேயன் பேராசிரியனார்.

'அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக்காத்தலும், நான்முகத்தானறிதலும், முயற்சியும் என்னும் ஐந்துடன் மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான். (எ-று.)' என்றார் மணக்குடவர். (குறள். பொருட். அமைச். 1.)

கற்றறிதலை இரண்டாக்காது குடிகாத்தலையே இரண்டாகப் பகுத்தார் மணக்குடவர் என்பது ஈண்டுக் காண்க.

"வினைசெய்தற்கண் அசைவின்மையும், குடிகளைக் காத்தலும், நீதிநூல்களைக்கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், முயற்சியும் மேற்சொல்லிய அங்கங்கள் ஐந்துடனே திருந்தவுடையானே அமைச்சனாவான் (எ-று.)" எனவும்; இனி இதனை ஈண்டெண்ணியவற்றிற்கே



தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனை யொழுக்கத்தாற் காத்தலு மெனப் பகுப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலு மெனப் பகுப்பாரும் உளர். அவர் உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப" எனவுங் கூறினார் பரிமேலழகர். (குறள். அமைச். 2.)

இக்குறளை இவ்வதிகாரத்து முதற்குறளாகவே மணக்குடவரும், பேராசிரியராலே பிறன்கோளுக்கு ஆதாரமாக நின்றவரும் கொண்டார் என்பதும் ஐந்துடன் என ஈண்டெண்ணியவற்றிற்கே ஆக்கி முறையே குடிகாத்தலையும், கற்றறிதலையும் பகுத்துக்கொண்டுரைசெய்தமையும் பிறவும் தெள்ளிதிற் புலனாகும்.

பேராசிரியராலே சுட்டப்பட்ட திருக்குறளாசிரியரும் மணக்குடவரைப்போலவே ஐந்துடன் என்பதனை ஈண்டுப் பகுத்துப் பொருளுரைத்தலினானே 'கருவி' எனுந் திருக்குறளை ஐந்தாவதாகவே கொண்டுள்ளார் என்பது இக்காட்டியதனாலும் இன்ன பிறவற்றானும் இனிது பெறப்படும். அது போக்கிக் கூறுதும்.

பரிமேலழகர், "ஐந்துடன்" என்பதனை ஈண்டுள்ளவற்றிற்கென்னாமல் அகரச்சுட்டு வருவித்துக்கொண்டு தாம் பொருளுரைத்தமைக்கு ஏற்றவாறு, அவரெல்லாம் ஐந்தாவதாகக்கொண்ட திருக்குறளை இவர் முதலாவதாகக்கொண்டார் என்பதும் வலியுறுகின்றது.

பரிமேலழகர் இன்னோரன்ன காரணங்களை யுள்ளிட்டுக்கொண்டு திருக்குறள் வரிசையைத் தாம் உரைக்கும் பொருளுக்கியையும்படி மாற்றியுள்ளார் என்பது தெள்ளத்தெளிந்த தொன்றாகும்.

இக்கொள்கையை நிலைநாட்டுதற்குப் பலப்பல குறிப்புக்களுமுண்டு. நேரம் வாய்ப்பின் எழுதுவாம்.

குடிகாத்தலைப் பகுத்தவர் மணக்குடவர். கற்றறிதலைப் பகுத்தவர் பேராசிரியராற் குறிக்கப்பட்டவர்.

மணக்குடவரும், பேராசிரியராற் குறிக்கப்பட்டவரும் ஆகிய இவ்விருவர்தம் பகுப்பையும் பரிமேலழகர் மறுத்துள்ளார். குடிகாத்தலை முன்னும் கற்றறிதலைப் பின்னுமாகக் கூறிய வைப்புமுறை திருக்குறட்கண்ணே அமைந்த சொல்வைப்பைப் பற்றியது. ஆதலின் அதுகொண்டு அவ்விருவர் காலவரிசைகளையும் ஆராய்தற்கியலாது.

போசிரியராற் குறிக்கப்பட்டார்பகுப்பை மணக்குடவரும், மணக்குடவர்பகுப்பை அவரும் மறுத்திலாதலின் இவ்விருவர் குறிப்பையுங் கொண்டு அக்காலவரிசைகளை ஆராய்தற்கு மியலாது.

போசிரியர் மணக்குடவர்பகுப்பைக்கொள்ளாது மற்றையோர்பகுப்பையே மேற்கோள் காட்டியிருத்தலின மணக்குடவர்க்கு அப்போசிரியராற் குறிக்கப்பட்டவரே காலத்தான் முந்தியவராவார் என்பது தானே போதரும்.

மணக்குடவர்பகுப்பு, போசிரியர்காலத் திருந்திருப்பின் அப்பகுப்பையே எடுத்துக்காட்டியிருப்பர். அல்லது மறுத்திருப்பர் என்பதும் அக்கொள்கையையே வலியுறுத்தும்.

இவற்றால் போசிரியராற் குறிக்கப்பட்ட திருக்குறளாசிரியர்க்குக் காலத்தாற் பிற்பட்டவர் மணக்குடவர் என்பதும் மணக்குடவர்க்குப் பிற்பட்டவர் பரிமேலழகர் என்பதும் கண்டு.

### பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும்.

"வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்" (திருமுருகாற்றுப்படை) என்புழி 'வசிந்து' என்பதற்குப் பிளந்து என்று பொருள்கூறி, படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனுதலிற் பொருந்தாது என்று விசேடவுரையுமெழுதினார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

வசிந்து என்பதற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனுதலிற் பொருந்தாது என்றல் "வாண்மிகு........ மொய்ம்பின்" (பரிபாடல். 9-51.) என்பதற்கு வாட்டழும்பு நெருங்கிய வெற்றிமொய்ம்பென்று பரிமேலழகர் எழுதிய உரையை மறுத்தலின் இவர்பரிமேலழகர்க்குக் காலத்தாற் பிற்பட்டவராவர்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றானே போசிரியராற் சுட்டப்பட்ட திருக்குறளாசிரியருக்குப் பிற்பட்டவர் போசிரியர் என்பதும், போசிரியர்க்குப் பிற்பட்டவர் மணக்குடவர் என்பதும், மணக்குடவர்க்குப் பிற்பட்டவர் பரிமேலழகர் என்பதும், சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையாசிரியர் புறநானூற்றுரையாசிரியர்க்குக் காலத்தான் முற்பட்டவர் என்பதும், அடியார்க்கு நல்லார் புறநானூற்றுரையாசிரியருக்குப் பிற்பட்டவர் என்பதும், அடியார்க்குநல்லார்க்கும் பரிமேலழகர்க்கும் பிற்பட்டவர் நச்சினார்க்கினியர் என்பதும் வலியுற்றனவென்க. (தொடரும்.)



# தொல்காப்பியத்து அகத்திணையியலின் 19-ம் சூத்திரம்.

இக்கட்டுரையில் 'முதலெனப் படுவ தாயிரு வகைத்தே' என்ற சூத்திரத்தைப்பற்றி ஆராய்வல். இச்சூத்திரம் தற்போதுள்ள தொல்காப்பியப் பதிப்புக்களில் தனிச்சூத்திரமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு கொள்ளின் இதன்பொருள் முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமுமாகிய அவ் விருவகையையுடையது என்பதாம். இப்பொருள்,

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே." (அகத். 4)

என்ற சூத்திரத்தினால் பெறப்படுதலின், இச்சூத்திரம் எற்றுக்கு என்ற ஐயம் நிகழ்கின்றது. இச்சூத்திரம் கூறியதனையே கூறிற்று என்று கருதியே உரையாசிரியர், 'இதனாற் பெற்ற தென்னையெனின் முதல் கரு உரிப்பொருளென அதிகரித்துவைத்தார்; இனிக் கருப்பொருள் கூறுகின்றார். உரிப்பொருள் யாண்டுக் கூறினார் என ஐயம் நிகழும்; அது விடுத்தல் என்க' என்றார். முதற்பொருளும் உரிப்பொருளும் முன்னரே கூறப்பட்டமையின் உரிப்பொருள் யாண்டுக்கூறினார் என ஐயம் நிகழுமாவென்பது ஆராய்தற்குரியது. நச்சினார்க்கினியரும் 'இது கூறிற்றென்றலென்னும் உத்திவகை. இதன் பயன் முதல் இரண்டுவகை என்றவாறும். தமக்கென நிலனும் பொழுதும் இல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் நிலனில்லாத பாலையும் பிற முதலொடு மயங்கிற்றேனும் அவை மயங்கிய நிலனும் பொழுதும் அவ்வத்திணைக்கு முதலெனப் படுமென்பதாம்' என்றனர், இவையெல்லாம் இவ்வியலின் தொடக்கத்துள்ள,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப" (அகத். 1)

"அவற்றுள்
நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே" (அகத். 2)

"முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (அகத். 3)

என்ற சூத்திரங்களாற் பெறப்படுதலின், அவரது கூற்றும் ஆராய்தற் குரியது.

அவ்வாறாயின் இச்சூத்திரம் வேண்டாவெனின், அற்றன்று; மூன்றாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட முறையே முதற்பொருளையும், கருப்பொருளையும் உரிப்பொருளையும் ஆசிரியர் விதந்துகூறியிருப்பின் இச்சூத்திரம் வேண்டாவாம். அவ்வாறின்றி முதற்பொருளின்பின்னர் உரிப்பொருளைக் கூறியிருத்தலானும், கருப்பொருள் முதற்பொருளின் கண்ணேயே இருத்தலானும் 'முதலெனப் படுவது நிலம் பொழு திரண்டின் .... ... ....' என்ற சூத்திரத்தின்பொருளையே இச்சூத்திரத்தில் அநுவதித்தாரெனக் கொள்ளவேண்டும். அங்ஙனமாயின் அஃதொரு தனிச்சூத்திரமாயிருத்தற்குரியதோ வெனின், உரியதன்று. ஆகலின் அதனைப் பின் வரும்,

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப"

என்ற சூத்திரத்துடன்கூட்டிப் படித்தல் பொருந்துமென்பது என் கருத்து. அவ்வாறாயின் 'முதலெனப் படுவ தாயிரு வகைத்தே' என்பதன்பொருள் முதலெனப் படுவதாகிய அவ்விருவகைக்கண் என்றாகும். இவ்வாறு இச்சூத்திரத்தைத் தனிச்சூத்திரமாகக் கொண்டிரார் ஆசிரியர் என்பதற்குச் சிறந்த காரணம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இவற்றுள் ஒருகால் விதித்ததனை மற்றொருகால் அவர் விதிக்காமையேயாகும்.

P. S. சுப்பிரமணிய சாஸ்திரி,
Principal, Rajah's College of
Sanskrit and Tamil Studies,
Tiruvadi.

---

உ

# யவனமஞ்சரி.

## 3-ம் பாகம்.

## அரிஸ்தாதில் எழுதிய ஒழுக்க நூல்.

[அஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

### நிச்சயித்தல்.

### முதலாம் அதிகாரம். சுதந்திரச்செயல்.

அறம் மெய்ப்பாடுகளிலும் செயல்களிலும் தோற்றுவதாகலால் செயல்களின் இயல்பை ஆராய்வோம். ஒரு செயலை நாம் சுதந்திரமாய்ச் செய்யும்போதே அதைப் புகழ்வதற்கும் இகழ்வதற்கும் உரிமையுண்டு. சுதந்திரமாய்ச் செய்யப்படாத செயல்களைப் பிறர் ஏவலாற் செய்கிறோம். ஒருவன் செயல்கள் குற்றமுடையவாயினும் சிற்சில அமயத்தில் அக் குற்றங்களை நாம் மன்னிக்கிறோம். வேறுசில அமயங்களில் அக்குற்றஞ் செய்தவன்மேல் இரங்குகிறோம் ஆகையால் அறத்தின் இயல்பைச் செப்புதற்குச் சுதந்திரச்செயலுக்கும் சுதந்திரம் இல்லாச்செயலுக்கும் உள்ள பேதத்தைப் புலப்படுத்துவோம் சுதந்திரச்செயல் நிச்சயிக்கப் பட்ட செயல் என்பதும் சுதந்திரமில்லாத செயல் நிச்சயிக்கப்படாத செயல் என்பதும் அறியற்பாலன.

நிச்சயிக்கப்படாதசெயல் பிறர் ஆணையின்படி செய்யப்படுவதும் அறியாமைகாரணமாகச் செய்யப்படுவதும் என இருவகைத்து. பிறர் ஆணைப்படிசெய்யும் செயலில் ஒருவன் தனது இச்சையை அடக்கி அவ் வாணைக்குக் கீழ்ப்படிகிறான். பிறர் ஒருவனை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு வலிந்திட்டுச்சென்றால், அப்பிரயாணம் அவன்செயலன்று. நாவாய்மூலமாக ஒரு துறைக்குச் செல்வோன் காற்றின்வலியால் வேறோர் துறைக்குச் செல்வானாயினும் அது அவன்செயலன்று சூறை வளி வீசும் திக்குக் கெதிராய் மரக்கலம் ஓட்டுதல் இயலாத செயல்.

பெரியதுரோகத்தைத் தவிர்த்தற்காகச் சிறுபிழை ஒன்றை ஒருவன் செய்வானாயின் அது எவ்வகைச்செயல் என்பதில் ஆசங்கை நிகழும். இவ் விருசெயல்களிலும் விருப்பமில்லாதானாயினும் ஒன்றையேனும் செய்யவேண்டியிருப்பதால் சிறுபிழையைச் செய்கிறான். உனது பெற்றோர்களையும் பிள்ளைகளையும் உயிரைக் காப்பாற்றுவதற்காகக் கொடுங்கோல்மன்னன் இட்ட ஆணை எத்தகைய இழிபுடைத்தாயினும் நீ செய்யத்துணிகிறாய். சுதந்திரமில்லாச்செயலாயினும் இச்செயல் நிச்சயிக்கப்பட்டதென்றறியத்தகும். புயலில் மாலுமி ஏற்றிய பண்டங்களைக் கடலில் வீசுவதும் இத்தகைய செயல். ஒருவரும் இச்செயலை விருப்பத்துடன் செய்வதில்லை; எனினும் இவ்வகைச்செயல்களெல்லாம் நிச்சயிக்கப்பட்டசெயலின்பாற்பட்டன. ஏனெனில் நோக்கம் கருதி அந்நேரத்தில் அச்செயலை நாம் நிச்சயித்தே செய்கிறோம். ஆகையால் நிமித்தகாரணனின் நோக்கத்தை ஆராய்ந்தே செயல்களின் வகையை நாம் நிச்சயிக்கவேண்டும். ஒரு செயலைச் செய்வதற்கும் அதைச் செய்யாதொழிதற்கும் ஒருவனுக்குச் சுதந்திரமுண்டு. இச்சுதந்திரத்தைப் பிரயோகியாமல் விடுவது இயல்பு. கொடுங்கோலரசன் ஆணையைச் செய்வது இழிபாயினும் ஒருவன் அதைச் செய்கிறான். உலகத்தவர் மனவலியில்லாதவர்களாதலால் இச்செயலைப் புகழ்கிறார்கள். இவ் விழிவானசெயலைச் செய்யாதபோது கண்டிக்கிறார்கள்.

புலன்வழிமயங்கி ஒரு தவறான செயலை ஒருவன் செய்தால் அவனை நாம் மன்னிக்கிறோம். ஆனால், சில வேளைகளில் பிறர் ஆணையின்படி தவறுசெய்வதிலும் இறப்பதே நன்று. யுரிப்பயிடிஸ் என்னும் நாடக ஆசிரியரது ஒரு *நாடகத்தில் அல்க்மீயன் என்பவன் தன்தாயைக் கொன்றது தவறு. அவ்வமயத்தில் யாவரும் அவ்வண்ணமே செய்திருப்பர். ஆணையின்படி ஒழுகும்போது அச்செயலை நிச்சயிக்கப்படாத செயலென்போம், ஒருவன் தான் விருப்பமில்லாதிருந்தபோதும் சில காரணத்திற்காக ஒரு செயலை வெறுப்புடன் செய்தானாயின் அச்செயலை

*இந்த நாடகம் தற்போது கிடைத்திலது.



நிச்சயிக்கப்பட்டசெயல் என்பதே முறை. ஏனெனில் அச்செயல் எவ்வாறாயினும் அவன் செயலே. அதைச் செய்யாமல் விடுவதற்கும் அவனுக்குச் சுதந்தரமிருந்தது. இன்பம் ஏவும்போதும் புலன்கள் ஒருவனை உந்தும்போதும் ஒருவன் தனது செயலை ஆணைச்செயலென்றும் சுதந்திரமில்லாச் செயலென்றும் எண்ணக்கூடும். இஃதுண்மையாயின் எச்செயலும் நிச்சயிக்கப்படாத செயலே. நம்மிடம் குறையிருக்க, புலன்களின்மீதும் உலகத்திலுள்ள புறப்பொருள்களின்மீதும் குற்றத்தைச் சாட்டுவது பிழை.

அறியாமை காரணமாகச் சிந்தனையின்றிச் செய்யப்படும் செயல்கள் நிச்சயிக்கப்படாத செயல்களாம் (கன்மேந்திரியச்செயல்களை நாம் செய்யும்பொழுது சிந்தனையில்லாது செய்தலினால் அதை நிச்சயிக்கப்படாத செயலென்றே மனநூலார் மொழிவர்). அறியாமை காரணமாகச் செய்த செயலைப் பிழையென்று அறிந்தபின் நிமித்தகாரணன் துக்கப்படுவானாயின் அது நிச்சயிக்கப்படாத செயல். தவற்றைச்செய்தபின் விசனமடையானாயின் அச்செயலை அவன் விரும்பியேசெய்தானென அநுமிக்கவியலாது. அன்றி அதை வெறுத்துச்செய்தானெனவும் இயலாது. அவன் ஏன் அச்செயலைச்செய்தானென அவனுக்குத் தெரியாது. அச்செயலை விருப்பு வெறுப்பாகிய சிந்தனையின்றிச் செய்திருக்கக்கூடும். இதை நிச்சயமில்லாத செயல் என்போம் (நிச்சயிக்கப்படாதசெயலை நிச்சயம் இல்லாத செயலென்றும் நிச்சயிக்கப்படாத செயலென்றும் வகுத்த முறை ஆசிரியர்க்குச் சிறப்பாயது. தற்கால மனநூலார் இந்த நுட்பம் அறியார் என்பது உரைக்குறிப்பு.) அறியாமைகாரணமாகச் செய்வதற்கும் மயக்கத்திற் செய்வதற்கும் பேதமுண்டு. மதுவுண்டு மயங்கியேனும் பெரும் வெகுளியினாலாயினும் ஒருவன் தவறுசெய்வானாயின் அச்செயல் அறியாமை காரணமாகவின்றி மயக்கங்காரணமாகச் செய்யப்பட்டது. மதுபானம் செய்யுமுன் தான்செய்யும் செயல் தவறென ஒருவன் அறிவான். அதன்பின் மயக்கத்தினால் மறந்து அத்தவற்றைச் சரியென நினைந்து செய்வன். இது நிச்சயிக்கப்

படாதசெயலாயினும் இச்செயல் குற்றமுடைத்து. சான்றோர் இதைக் கண்டிப்பர்.

தூர்த்தர் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாதென அறியாமலே தீநெறியிற்செல்வர். சரியோ பிழையோ வெனத் தெரியாது செய்யப்பட்ட செயலை நிச்சயிக்கப்பட்ட செயலென்பது முறையன்று. ஒருசெயலைச் சரியோ பிழையோவென அறியாமலிருப்பதற்குக் காரணம், பிழை, பிழையன்று என நிச்சயிக்கும் ஆதார பிரமாணங்களை அறியாமையன்று. நன்மையோ தீமையோ, சரியோ பிழையோ வெனத் தெரியாமல் இருப்பதன் காரணம், காலம், இடம், வகை, செய்பொருள் முதலியவற்றைத் தெரியாமலிருப்பதே. ஏற்ற இடமும், ஏற்ற மனிதனும், ஏற்ற முறையுந் தெரியாமலிருப்பதே அறியாமை. இவற்றை அறிந்தோர் பிழைசெய்யார். காலம், இடம் முதலியவற்றை வகுப்பது நன்று. (1) செய்பவன்-கருத்தா. (2) செயல். (3) செயப்படுபொருள்—யார்மேல் செயல் பயன்படுகிறதோ அவர்) (4) எக்கருவியால் செய்யப்பட்டது. (5) என்ன நிமித்தமாகச் செய்யப்பட்டது. (தன்னைக் காப்பாற்றுவதற்கோ?) (6) எவ்விதமாகச் செய்யப்பட்டது (சாந்தமாகவா? அன்றி மூர்க்கமாகவா?) பித்தன் ஒருவனே இவற்றில் ஒன்றையும் அறியாமலிருப்பன். எவனும் செய்பவனையாயினும் அறிவன். ஏனெனில் தன் கருத்தைத் தெரியாமல் எவ்வாறு ஒருவன் வினையாடலாம்.

ஒருவன் தன் செயலை அறியாதுசெய்தல்கூடும். 'நான் மறந்து கூறினேன்', 'தற்செயலாகக் கூறினேன்' என்னும் வாக்கியங்களை நோக்கி அறிக. அம்பு வில்லையுறம்பழுதுவதற்கொழிய இவனைக் கொல்வதற்கன்று; 'நான் எய்தேன்' என்பதையும் கேள்வியுற்றேம். யுறிப்பயிடிஸ் என்பவரின் நாடகத்தில் மெரோப் என்பவன் சொன்னதுபோல ஒருவன் தன் மகனை ஒரு சத்துருவெனத் திரிவுக்காட்சியாற் கொல்லக்கூடும். மேலும், வைத்தியன் பிணியைத் தீர்க்கும் மருந்தென நினைத்து அம்மருந்தால் நோயாளியைக் கொல்லக்கூடும். இவ்வாறு அறியாமை காரணமாகச் செய்வதெல்லாம் நிச்சயிக்கப்படாத செயல்கள். இத்தகைய



செயல் செய்தபின், அறியாமை நீங்கி, தன்செயல் தவறென அறிவானாயின் கருத்தா துக்கப்படவேண்டும். இச் செயல் நிச்சயமில்லாச் செயல். நிச்சயிக்கப் படாத செயலில் கருத்தாவுக்கு வெறுப்பு உண்டாகையால், அச்செயலைப்பற்றிச் சிந்தனை நிகழும். நிச்சயமில்லாச் செயலில் விருப்பும் வெறுப்பும் இன்மையால் அச்செயல்செய்யும்போது துக்கமின்றி அது சரியென்ற ஒரு எண்ணத்தாற் செய்வன். மேற் கூறியவற்றிலிருந்து நிச்சயிக்கப்படாத செயலின் இலட்சணங்கள் அறியப்படும்.

எவரிடம் செய்யத்தகுந்தது, எக்காலத்திற் செய்யத்தகுந்தது, எவ்விடத்திற் செய்யத்தகுந்தது, எக்கருவியாற் செய்யத்தகுந்தது, எவ்விதமாகச் செய்யத்தகுந்தது என்னும் சிறப்புவகை அறிவுடன் ஒருவர் ஒருசெயலைச் செய்வாராயின் அச்செயல் நிச்சயிக்கப்பட்டதெனப்படும். இத்தகைய நிச்சயிககப்பட்டசெயலுக்கு அவன் உத்திரவாதி. வெகுளிகாரணமாயும் ஆசைகாரணமாயும் செய்யப்பட்ட செயலும் நிச்சயிக்கப்பட்ட செயல் என்பது எமது கோட்பாடு. அப்படியன்றாயின குழந்தைகளும் விலங்குகளும் நிச்சயிக்கப்பட்ட செயல்கள் செய்ய இயலாதவை எனத் துணிவேம். ஆனால் அவற்றுக்கும் நிச்சயிக்கும் ஆற்றல் உண்டு. மேலும், வெகுளியினும் ஆசையினும் நாம் செய்யும் செயலெல்லாம் நிச்சயிக்கப்படாததா? அல்லது சில நிச்சயிக்கப்படாததா? அன்றி வெகுளியிற்செய்யும் நற்செயலெல்லாம் நிச்சயிக்கப்பட்டதாயும் தீச்செயலெல்லாம் நிச்சயிக்கப்படாததாயும் கொள்ளப்படுமோ? இறுதி வினாவிற்கு உடன்பாட்டுவிடை கொடுத்தால் நகைத்தற்கிடனாகும் யுக்திபதற்கு உடன்பட்டால் நாம் ஆசைப்பட்டுச் செயல் செய்ய விரும்பியபின் செய்யும் செயல் நிச்சயிக்கப்படாதசெயல் என்பதாய் மாறுகொள்ளமுடியும். என்னை? ஒன்றை நாம் நிச்சயிக்குமுன் அதில் நாம் ஆசைப்பட்டிருக்கவேண்டும். ஆனால் உலகில் நாம் வெறுக்க வேண்டியபொருள்கள் உண்டு. அவற்றை நாம் சுதந்திரமாய் வெறுக்க நிச்சயித்தே வெறுப்பேம். வெறுப்பானசெயல் துன்பம்விளைக்கும்;

வெறுப்பில்லாது விரும்பிச்செய்யும் செயல் இன்பம்விளைக்கும். ஆலோசித்துத் தவறிழைப்பதற்கும் வெகுளிகாரணமாய்த் தவறிழைப்பதற்கும் பேதம், செய்தவனை நோக்காது செயலைமாத்திரம் நோக்கினால் புலப்படாது. இருசெயலையும் நாம் விலக்கவேண்டும். வெகுளியிற்செய்யப்படுவதும் மனிதனதாகையால், அச்செயலை நிச்சயிக்கப்படாதது என்பது மடமை.

### 2-ம் அதிகாரம். தெரிதல்.

இருவகைச்செயலையும் பிரித்துவிளக்கினோம். இனித் தெரிதல் என்னும் நோக்கத்தைப்பற்றி விரித்துரைப்போம். அறமாய்த் திரிந்த செயலை ஆராய்வதும் அறத்தொடு மிகவும் சம்பந்தப்பட்ட தெரிவை ஆராய்வதும் ஒன்றென உபத்துணர்க. தெரிதல் நிச்சயித்தலின் அங்கம். குழந்தைகளும் மிருகங்களும் இச்சிக்கின்றனவாயினும், தெரிதல்செய்யமாட்டாதவை. சடுதியாய்ச் செய்யப்பட்டதை நிச்சயிக்கப்பட்டதென்றாலும் அது தெரிவுசெய்யப்பட்டதன்று. தெரிதல் என்னும் தத்துவத்தைச் சிலர் வெகுளியென்றும் சிலர் ஆசையென்றும் சிலர் அபிப்பிராயம் என்றும் கூறுப.

முதலாவதாகத் தெரிதல் பகுத்தறிவில்லாத விலங்குகளுக்கும் பகுத்தறிவுள்ள மனிதனுக்கும் பொதுவானதன்று. வெகுளி இருவகைச்சீவன்களுக்கும் பொதுக்குணம். அடக்கமில்லாதவன் ஆசையால் ஒரு செயலைச் செய்வான். அடக்கமுள்ளவன் நோக்கத்துடன் செய்வான். ஒருபொருளை நாம் இச்சித்தால் இன்பமும் வெறுத்தால் துன்பமும் விளையும். ஆனால் அப்பொருளைநோக்கித் தெரிவுசெய்யும்போது, அச்செயலில் இன்பமும் இன்று, துன்பமும் இன்று. மெய்ப்பாட்டுநிலையில் தெரிவுசெய்தல் இயலாததாகையால் தெரிவு வெகுளியன்று. தெரிவு ஆசையுமன்று. எய்தமாட்டாதபொருளை மக்கள் ஆசைப்படுவதும் தெரிவது மில்லை. நிமித்தகாரணமாயிருந்து சித்தியடையக்கூடியபொருளையே நாம் தெரிகிறோம். ஒரு நோக்கம்



வைத்தே ஒருபொருளை இச்சிப்போம். அப்பொருளை அடைவதற்கு உதவும் கருவி, வழி வகைகளை இச்சிக்கிறோமெனக்கூறாமல் தெரிகிறோமென்போம். சந்தோஷத்தை நாம் விரும்புகிறோம். நாம் சந்தோஷநிலையில் இருக்கும்போது தெரிவுசெய்யோம். இனித் தெரிதல் அபிப்பிராயமுமன்று. தெரிவை நல்ல தெரிவு, இழுக்குடைய தெரிவென வகுப்போம். அபிப்பிராயத்தைப்போலத் தெரிவை உண்மை பொய்யென ஒருவரும் வகுப்பதில்லை. அபிப்பிராயம்பற்றி ஒருவனை நல்லவன் தீயவனென மொழிகிறோமல்லோம். ஒருவிஷயத்தைப்பற்றி அபிப்பிராயபேதமிருந்தால் அதன் உண்மையை ஆராயவிரும்புவோம். நாம் அறியாதபொருளைப்பற்றி அபிப்பிராயம் வைத்திருக்கலாம். அறிந்த பொருளில்மாத்திரம் தெரிவுசெய்யலாம். அபிப்பிராயங்களை எடுத்துரைக்கவல்லுநர் எல்லோரும் தெரிவதில் வல்லுநரல்லர். தெரிவுசெய்வதற்கு அபிப்பிராயங்கள்வேண்டப்படினும் தெரிவும் அபிப்பிராயமும் ஒன்றல்ல. அப்போது தெரிவென்பதென்ன? தெரியப்பட்டனவெல்லாம் இச்சிக்கப்பட்டனவாயினும் இச்சிக்கப்பட்டனவெல்லாம் தெரியப்பட்டனவல்ல. ஒருபொருள் இச்சிக்கப்பட்டபின் ஆலோசிக்கப்பட்டு, அதன் பின்னரே தெரியப்படும். தெரிதலுக்கும் இச்சித்தலுக்கும் வேற்றுமை ஆலோசித்தல்.

### 3-ம் அதிகாரம். ஆலோசித்தல்.

ஆலோசித்தல் என்பதென்ன? எப்பொருளையும்பற்றி ஆலோசித்தல் முடியுமோ? மனிதன் ஆலோசிக்கக்கூடியபொருள்கள் பகுத்தறிவின் எல்லையுள் அடங்கும். பேதையும் பித்தனும் சிந்திக்கும் விஷயங்கள் எல்லாம் ஆலோசிக்கத்தகுந்த விஷயங்களல்ல. மாறுதலடையாத நித்தப்பொருளைப்பற்றி மனிதர் ஒருவரும் ஆலோசியார். மாறுதலடையும் பொருள்களுள்ளும் தொடர்புமுறையின்றித் தற்செயலாய்த் தோன்றி நின்று அழிவதைப்பற்றியும் ஒருவரும் ஆலோசியார். மாறுதலடையும்பொருள்களில் காரண காரியத் தொடர்புடைத்தாய்த் தோற்றநாச முடையனவற்றைப்பற்றியே நாம் ஆலோசிக்கிறோம். புதையல்

தோன்றும்போது ஏன்தோன்றிடதென நாம் சிந்தியோம். மனிதனுக்கு இன்பதுன்பங்களைவிளைக்கும் சம்பவங்களைக்கூடச் சிலவேளைகளில் நாம் சிந்தியேம். சிதியநாட்டுக்கேற்ற அரசியல்முறையைப்பற்றி ஸ்பாட்டா தேசத்தவர் ஆலோசியார். நம்மாற் செய்ய வல்லமையில்லாதசெயலைப் பற்றிச் சிந்திப்பதில் நாம் அடையும் சுகமென்ன?

மெய்ப்பொருளாகிய பூரணநன்மையைப்பற்றி நாம் ஆலோசியோம். வைத்தியம், திரவியந்தேடல், நாவாயோட்டல், முதலிய கலைஞானங்களைப்பற்றிச் சிந்திக்கிறோம். நாம் ஆலோசித்து நமது பயிற்சியால் ஆக்கும் பொருள்களை ஆக்கும்வழி தெரியாதபோதில் பிறருதவிவேண்டி நிற்போம். நோக்கங்களிலும் கருவி, வழி வகைகளை ஆலோசிப்பேம். வைத்தியன் நோய்தீர்த்தல் என்னும் நோக்கத்தைப்பற்றி ஆலோசியான். சொற்பொழிவுசெய்வோனும் தன்வசப்படுத்துவது சரியோ பிழையோவென ஆலோசிக்கிறானல்லன். நோயை எவ்வாறு தீர்க்கலாம் என்றும் எப்படித் தன்வசப்படுத்தலாமென்றும் யாவரும் ஆலோசிப்பர்.

ஆலோசித்தல் ஒரு ஆராய்ச்சி. ஆனால் எல்லா ஆராய்ச்சிகளும் ஆலோசித்தலல்ல. யாங்ஙனமெனிற் காட்டுதும். கணிதவாராய்ச்சியில் நாம் சிந்திக்கிறோம். அதை ஆலோசித்தலென மொழியோம். வழி வகையைப்பற்றியே ஆலோசித்தல் செய்கிறோம். இந்த அப்பம் வெந்ததோவென ஆலோசித்தல் பேதைமை; ஏனெனில் அது காண்டல் அளவையால் உடன் புலப்படுதலால் ஆலோசிக்கப்படும்பொருளும் தெரியப்படும்பொருளும் ஒன்றே. ஒன்றை விரும்பி (இச்சித்து) ஆலோசித்து, தெரிவுசெய்கிறோம். கோமர் என்ற புலவரும் பின்வருமாறு விளம்பினர். "ஒன்றைத், தெரிந்தபின், செய்யுமுன் அதைப் பிரசைகளுக்கு அரசர் அறிவிப்பர்."

### 4-ம் அதிகாரம், நன்மை தீமை.

ஒன்று நன்மையாயின் அதில் ஆசைகொள்வோம். ஒருசாரார் யாது ஆசைப்படும்பொருளோ அதுவே நன்மையென்றும், வேறொரு



சாரார் யாது நன்மையாய்த்தோன்றுகிறதோ அதையே விழைகிறேம் என்றும் மொழிவர். விழையப்படும்பொருள்களெல்லாம் நன்மையானவையல்ல. ஆசைகள் சில தவறாயிருத்தல் இயற்கை. இனி நன்மையாய்த் தோன்றுவனவற்றையே ஆசைப்படுகிறோமென்பவர் நன்மையாத்தோன்றும்பொருளை அறிவரல்லாமல் உலகில் இயல்பாயிருக்கும் நன்மையை உணரமாட்டார். அதாவது உலகில் தன்னியல்பில் நன்மையான நன்மையை இத்தகையோர் அறியார். இம்மையில் ஒரு பொருள் ஒருவர்க்கு நன்மைபோலவும் மற்றொருவர்க்குத் தீமைபோலவும் தோன்றும். முற்றும் உணரும் வல்லமையில்லாதவராகையால் மனிதர் சிலவேளைகளில் ஒன்றற்கொன்று எதிர்மறையாகிய இருபொருள்களையும் நன்மையென்பர். இவ்விருசாராரும் உண்மையறியாது மயங்குகின்றனர். நன்மை என்பது உண்மையாக விரும்பப்படும்பொருள். நன்மைபோலத்தோன்றுவது சிற்சிலரால் விரும்பப்படுவது. சான்றோர் நன்மைப்பொருளை அறிவர். மயக்கவுணர்வினை உடையோர் பலவாறு விரும்புவர். தேகசுகமுடையோன் நல்லபண்டங்களை நல்லதென்பன். பிணியன் கூடாதபண்டத்தையும் நல்லதென்பன். இவ்வாறு ஒருவர் இனிப்பு, குளிர்மை, மென்மை என்னும் உடன்பாட்டுப்பண்புகள் மற்றொருவர்க்குக் கைப்பு, சூடு, வன்மை என்னும் எதிர்மறைப் பண்புகளாகும். சுத்தகுணமுடைய பூரணமனிதன் நன்மை என்பதை அளவைசெய்து இலகுவாய் அறிவன். இன்பம் பொதுசனங்களை ஏமாற்றுந்தன்மையது. தீங்குவிளைக்கும் இன்பம் நன்மைபோலத் தோன்றும்,

### 5-ம் அதிகாரம், தெரிந்துவினையாடல்.

ஏதேனும் நன்மையை நோக்கியபின், அதற் காகவேண்டிய வழி வகைகளைத் தெரிவேம், ஆனதுபற்றிக் கருவி, வழி வகைவேண்டி நிற்கும் செயல்கள் எல்லாம் நிச்சயிக்கப்பட்ட செயல்வகையைச் சேரும். அறங்களெல்லாம் வழிவகைகளை வேண்டிநிற்பனவாகையால் நிச்சயிக்கப்பட்ட செயல்கள் ஓர் அறத்தைச் செய்யச் சுதந்திரமுடையோமானால்

அதைச் செய்யாமல் விடுவதற்கும் சுதந்திரமுடையோமாவோம். சுதந்திரச் செயல் ஒன்றற்குமே மனிதன் உத்திரவாதி. நன்மார்க்கம் துன்மார்க்கம் என்பது இச் சுதந்திரச் செயல்மாத்திரமே. ஒருசெயலுக்குப் பிறர் காரணராகாவிடின் செய்தவனே காரணன். தேசாதிபதிகளின் பிரமாணங்கள் இதை வற்புறுத்துகின்றன. தீமை அறியாமையினாற் செய்யப்பட்டதாயினும், தீமை செய்வோர் தண்டிக்கப்படுவர். தீயொழுக்கத்தைத் தீயொழுக்கமென அறியாதிருத்தல், அவரது குற்றமே.

இனி நிச்சயிக்கப்படாதசெயல்களைச் செய்யும்படி ஒருவரும் தூண்டார். சூரியவெப்பத்தினாலேனும் துக்கத்தினாலேனும் வருந்தும்போது வெப்பமுமில்லை, துன்பமுமில்லை என ஏமாற்றமுயல்வது வீண்முயற்சி. தவிர்க்கக்கூடிய அறியாமைகாரணமாக ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்தால், அவன் தண்டிக்கப்படுவான். குடிகாரணமாக ஒரு குற்றம் செய்தவனுக்கு இருமடங்கு தண்டனை விதிக்கப்படும். மதுபானஞ் செய்தல் அறிவை மயக்குமென்பதை ஒருவன் அறிந்திருக்கவேண்டும். அறியக்கூடிய ஆணைகளையேனும் நியாயப்பிரமாணங்களையேனும் அறியாது மீறி நடந்தால், தண்டிக்கப்படுகிறோம். தீயவனாவது கூடாவொழுக்கத்தானும், குடியினாலும், பிறவற்றானும்; ஆகையால் ஒருவனது குணத்திற்கு ஒருவன் உத்திரவாதி. ஒருவனது குணம் ஒருவன் பழக்கத்தின்வழி நிற்கும். பந்தயத்திற் சேர்ந்தோர் விடாமுயற்சியுடன் ஒவ்வொரு பயிற்சியினும் பழகுவதைக் கண்டாமல்லோ.

அநீதி செய்பவன் அநீதியை நிச்சயிக்காமற் செய்கிறான் என்பது சரியன்று. அநீதியென அறிந்தும் அநீதிசெய்து பழகியவனுக்கு நீதி செய்தல் முடியாது. நோயாளி எப்படி விரும்பினாலும் நோய் உடனே சுகப்படாது. ஒரு காலத்தில் சுகமாயிருக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. தேகசுகத்தை நோக்காதொழுகி நோய்பெற்றபின் சுகமாயிருக்கும் சுதந்திரமின்று. ஒன்றைத்தெரிந்தபின் மீளவும் அத்தெரியுரிமை ஒருவனுக்குக் கிடையாது. கல்லை எறிந்தால் வலிக்கேற்ற



தூரஞ் சென்றுதான் விழும். அது இயற்கையாய்விழுமுன் நாம் எவ்வாறு விரும்பினாலும் நிச்சயித்தாலும் விழாது. துன்மார்க்கத்தில் மூழ்கியபின் அதை விலக்குவது கஷ்டம். இயற்கையாயுள்ள அவலட்சணத்திற்காக ஒருவனைக் குறைசொல்லேம். ஆனால் தேகாப்பியாசம் இல்லாமல் அவலட்சணமாயிருந்தால் அது குறையாய் மதிக்கப்படும். பிறவிக்குருடனுக்கு இரங்குவோம். தீய ஒழுக்கமாகிய குடிமுதலியவற்றால் பார்வை கெட்டால், ஒருவனைக் கண்டிக்கிறோம்.

தோற்றத்தினது உண்மையை அறிவது மனிதனாற்றலைக் கடந்ததாகையால், நன்மையாய்த்தோற்றுவதைத் தெரிவார் குற்றமுடையார் என்பர். நன்மைக்கும் நன்மையாய்த்தோன்றுவதற்கும் வேற்றுமையறிவது ஒருவன் குணவிசேடம். நல்லவற்றைத் தீயவற்றினின்று பிரித்தறிதல் ஒருவரது பிறவிக்குணவிசேடமாயின், நற்செயலை நாம் எப்படி நிச்சயிக்கப்பட்டசெயலென்பது. நன்மை பிறவிக்குணத்தானன்றி, நற்பழக்கத்தானாவது. நல்லொழுக்கமும் தீயொழுக்கமும் ஒரேமாத்திரையாகவே நிச்சயிக்கப்படுவன. நோக்கங்களை நிச்சயிப்பதிலும் செயல்களைத் தெரிவதிலும் சேதனனாகிய புருடன் நல்லோரிலும் தீயோரிலும் ஒரேமுறையாகவே தொழிற்படுவன். நல்லொழுக்கம் நிச்சயிக்கப்பட்ட செயலாயின் தீயொழுக்கமும் அப்படியே?

இதுகாறும் அறங்களின் தன்மையும், அவை சமனென்பதும், பயிற்சிப்பட்ட சக்தியென்பதும், தத்தம் செயல்களில் துலங்குமென்பதும், சுத்தப்பருத்தறிவிற்றோற்றம் என்பதும் விரித்துரைத்தாம். விசேடச்செயல் ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றாய் நன்மைபோ தீமைபோவென நிச்சயித்துச்செய்வோம். வினைய பழக்கங்கள் தொடக்கத்தில் நிச்சயிக்கப்பட்டுச் சூக்குமமாய் வளர்ந்து நிச்சயிக்கப்படாதசெயல்போ லிருப்பன. தொடக்கத்தில் பழக்கத்தை மாற்றும் சுதந்திரம் உடையோமாகையால், பழக்கங்களும் நிச்சயிக்கப்பட்ட செயல்களே. இனிப் பிரதானமான அறங்கள் ஒவ்வொன்றின் சொரூபத்தையும் ஆராய்வோம்.

### 6-ம் அதிகாரம். வீரம்.

அச்சத்திற்கும் தன்வலியில் நம்பிக்கைக்கு முள்ள சமன் வீரமென்றோம். அச்சம் என்பது இடையூறு வருமென எதிர்பார்த்திருப்பதே. அச்சம்விளைதற்கான காரணங்கள் இழிவு, நல்குரவு, பிணி, நட்பின்மை சாக்காடு முதலியன. இழிவான செயலுக்கு நாம் அஞ்சவேண்டும். நல்குரவும் பிணியும் நம்மால் ஆவனவன்றி எவர்க்கும் தெய்வச்செயலால் ஆவதால் அவற்றிற்கு நாம் அஞ்சுகின்றிலேம். யுத்தகளத்தில் உயிர்க்கஞ்சுபவன் வீரனல்லன். தன மனைவிமக்கட்கு விக்கினம் வருமென அஞ்சுபவனைக் கோழையென்பது பிழை. இறந்தபின் நிகழும் நன்மை தீமை தெரியாவாகலான் நாம் சாவிற்கும் அஞ்சவேண்டும். அஞ்ச வேண்டுவதற்கு அஞ்சுதல் அச்சமன்று. நீரில் அமிழ்ந்து இறக்கும் போதும் நோயால் வருந்தி இறக்கும்போதும் மனவலியுடையாயிருத்தல் எல்லார்க்கும் முடியாது. யுத்தத்தில் வீரம் நன்றென்பதற்கு அரசர் யுத்தவீரர்க்கு வெகுமதி அளிப்பது ஒரு சான்று. வீரன் பிணிக்கு மஞ்சான், புயலுக்கு மஞ்சான், யுத்தத்திலும் முன்னோக்குவான். கப்பலோட்டிகள் சாமானிய மனிதரினும் கடலில் துணிகரமாயிருப்பது வியக்கத்தக்கதன்று. அவர் பழக்கத்தினால் துணிகரமுடையவராகின்றனர்.

### 7-ம் அதிகாரம். அஞ்சாமை.

அஞ்சாமைக்குக் காரணம், ஒவ்வொருவரிடத்தும் சிறப்பாயுள்ளது. பகுத்தறிவுள்ள மக்களால் அஞ்சப்படுவதே எல்லாராலும் அஞ்சப்படவேண்டியது. அறம் மேன்மையாகலின் வீரகுணமுடையவன் தன சமயோசித புத்தியை உபயோகித்து அஞ்சுவதற்கஞ்சுவான். சிலர் அஞ்சுவதற்கு அஞ்சாமலும் அஞ்சப்படாதவற்றிற்கு அஞ்சியும் குற்றமுடையவர் ஆவர். இவற்றில் உண்மைவீரம் காட்டுவது வீரன்செயல். ஒன்றற்கும் அஞ்சாதவன் பித்தன். அப்பண்பை யுணர்த்தும் மொழி இல்லை கேல்ஸ் என்னும் சாதியார்



திரைகடலுக்கும் அஞ்சார், பூமியதிர்ச்சிக்கும் அஞ்சார். இவ்வாறு அஞ்சவேண்டியதற்கு அஞ்சாமை பேதைமை. இத்தன்மையான வீம்பர் வீரன்போல் நடிப்பர். இவர் பெரும் ஆபத்து நேரிடும்போது பின்னிடுவர். கோழையனும் வீரனும் தத்தம் சுயகுணத்தை ஒரேதருணத்திற் காட்டி முறையே இகழவும் புகழவும் படுவர். இனி இரவச்சத்தாலும் காதல் காரணத்தாலும் தற்கொலைபுரிபவன் கோழையன். அவன் தனது இடையூற்றைச் சகிக்கமுடியாமல் தற்கொலைபுரிய விரும்புகிறான்.

### 8-ம் அதிகாரம். ஐவகைப் போலிவீரம்.

இது நிற்க. இனிப் போலிவீரம் ஐவகைத்து. அவை அரசியல் விஷயங்களில் தோற்றுவன. முதலாவது:— கோமரது காப்பியத்தில் கேக்சர் டையமீட் என்ற இருவரும் ஒருவரை மற்றவர் இகழ்வாரென்று அஞ்சி வீரச்செயல் செய்யத்துணிந்தனர். சிலர் சேனாதிபதியின் தண்டனைக்குப் பயந்து யுத்தம் புரிவர். வருத்தத்திற்கஞ்சி—இழிவுக்கஞ்சிச்—செய்யாமைபான் இத்தகைபோர்செயல்கள் வீரச்செயல்களல்ல. உயிர்க்கஞ்சிப் பிறாது ஆணைக்குக் கீழ்ப்படிபவர் அடிமைத்தன்மைபூண்டு ஒழுகுபவர்.

இரண்டாவது: அனுபவத்தால் வீரம் வளர்வதுண்டு. சோக்கிறேற்றிஸ் என்பவரின் ஆப்தவாக்கியம் இதை வலியுறுத்துகின்றது. அவர் "அறம் என்பது அறிவு; வீரமென்பது அறிவு" என்று ஓதினர். மூலப்படை யுத்தத்தில் வெகுகாலம் பழகியமையால் துணிகரமுடையதாய்த் தோற்றுகின்றது. பகைவர்தொகை கூடுமாயின் உடனே அஞ்சுகின்றது. மூலப்படை அழிந்தபின் தேசத்தை அன்னியர் கைப்பற்றவிடாது பாதுகாக்கும் நோக்கத்துடன் திரண்டெழுந்த பொதுசனப்படை ஒன்றற்கும் அஞ்சாது. ஆகையால் யுத்தம் என்னும் கலை ஞானப்பயிற்சியால் ஆய வீரம் மேன்மையன்று.

மூன்றாவது: சிலர் கடுஞ்சினத்தை வீரமென்பர். வீரமுடையான் கடுஞ்சினத்தால் வஞ்சினங்கூறி ஆரவாரிப்பது உண்டு. அவனுக்கு இரத்தம் துடிப்பது முண்டு. காட்டுமிருகம் நோவுக்கஞ்சியும் வெகுளி காரணமாயும் ஆர்ப்பரிப்பதுபோல மனிதன் ஒழுகுவது நன்றன்று. அப்படியாயின் பசி பிணி முதலியவற்றால் வருந்தும்போதும், ஒருவன் வீரனாவான். ஏனெனில் பிறர் அவனை வருத்தும்போதும் அவன் பசி தீர்ப்பான்: பிறர்மனைவிழைவாரும் மோகங்காரணமாகப் பெரும் வீரச் செயல் செய்வார்கள். கடுஞ்சினத்தில் வஞ்சினம் மொழிதல் வீரமன்று. சான்றோர் நற்செயலாக வீரச்செயல் செய்வதொழிய வீரம் கோபம் வந்துழிக் காட்டார்.

நான்காவது: யாவரையும் கொலைபுரிய எண்ணுபவன் வீரனல்லன். இவன் கொலைத்தொழிலிற் பழகியமையால் பலரைக் கொல்ல முயலு கிறான். இது இவனது இயற்கை. கட்குடித்தலாலும் சிலர் இக்குணங் கொள்வர்.

ஐந்தாவது: ஆபத்துநிகழும்போது பகைவரது வலிமை அறியா மையால் சிலர் அவருடன் போரத்துணிகிறார்கள். உதாரணமாக: யுத்தத்தில் புகழ்பெற்ற ஸ்பார்ட்டா தேசத்தாரைச் சிறியதேசத்தவரென மயங்கித் துணிகரமாய் ஆர்கிவநாட்டார் போர்புரிந்தனர்.

### 9-ம் அதிகாரம். வீரம் வன்மைச்செயல்.

இனி வீரமென்பது துன்பம் அனுபவித்தற்கு வேண்டிய மன வலிமை என்பர். இன்பவழிச்செல்லாமையினும் துன்பமனுபவித்தல் கஷ்டம். ஈண்டு வீரம் இன்பமன்றென நான் நிரூபிக்கவில்லை. தூர் அறத்திற் பழகுவது எப்போதும் இன்பம்விளைக்காது. வீரத்திற் பயில்வது பெரும்பாலும் யுத்தகளத்தில்; ஆகையால் துன்பமே பயக்கு மெனினும் எவ்வறத்தின் நோக்கும் அறம்செய்தபின்னராயினும் இன்பத் தைப் பயக்கும். இத்துடன் வீரத்தின் வரலாற்றை முடிப்பேம்.



### 10-ம் அதிகாரம். அளவுகடவாதொழுகுதல்.

வீரமும் அளவுகடவாதொழுகுதலும் ஓரினத்தைச் சேர்ந்தனவாத லால் ஈண்டு வீரத்தின் ஆராய்ச்சியின்பின் அளவுகடவாதொழுகுதலை ஆராய்வது முறை. இன்பங்களிலேயே பெரும்பாலும் அளவு நோக்கு கிறோம். ஐம்புலவின்பமாகிய பகுத்தறிவில்லாப்பகுதியில் தோற்றும் பூதவான்மாவின் இன்பமும் பகுத்தறிவில் தோற்றும் இன்ப மாகிய அந்தக்கரணவின்பமு மென இன்பம் இருவகைத்து. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் முதலிய ஞானேந்திரியத்தாற் பெறப்படும் இன்பங்களை ஐம்புலவின்பம் என்பேம். அவை இகழப்படும் இன்பங்கள். பேராசை, கல்வி, அன்பு முதலியவற்றான் விளையும் இன்பங்கள் ஐம்புலவின்பத்தி லும் புகழப்படும். ஒருவரும் பகுத்தறிவின் இன்பங்களில் அளவு நோக்கார். ஒரு புலவன் கட்டுரை எழுதுவதில் அளவுகடந்த விருப்ப முடையவனாயினும், அவன் தீயனல்லன்.

காட்சியின்பத்தில் ஒருவன் அளவுகடப்பினும் அது பெருங்குறை யன்று; ஓசையினும் இவ்வாறே; நாற்றத்திலும் அதிகம் இன்புறுவ தில்லை. பசிதீர்க்கும்போதும் ஒருவன் ஊணில் இன்புறலாம். அந்த நோக்கமாகச் சீவியம் முழுதும் ஒருவரும் இன்புறக்கூடாது. சுவையி லும் ஊற்றிலும் அளவுநோக்குதல் அவசியம். ஊற்றினும் சுவையினும் அளவுகடந்து இன்புறுதல் கீழ்மை. முயலை நாய் தொடர்வது முய லின் மணத்திற்காகவன்று, அதன் மாமிசத்திற்காகவே. எருதின் தொனியில் சிங்கம் இன்புறுகின்றதன்று; தொனிமூலமாக எருது அண்மையில் உண்டென அறிந்தமையால், இரை உண்டென இன்புறும். ஊறுமூலமாகவே உண்பதிலும், குடிப்பதிலும், புணர்ச்சியிலும் நாம் சுவைத்து இன்புறுகிறோம். பண்டைக்காலத்தில் ஒருவன் தன் தொண்டை ஒரு நாரையின் கழுத்திலும் நெடிதாக இருக்கவில்லையெனத் துக்கித்தற்குக் காரணம் வெளிப்படை. ஊற்றிற் சுவைப்பது விலங் குத்தன்மை. மல்லன் எண்ணெய்தேய்த்து உடம்புமுழுதும் ஊறு செய்வதிற் குற்றமில்லை. தீயோன் ஊறுசெய்து இன்புறுவது உடம் பிற் சில பகுதியையே,

## 11-அதிகாரம். ஆசை.

இச்சைகள் மனிதனுக்குப் பொதுவாயும் சிறப்பாயும் உள்ளன. பசிக்கும்போது உணவும், ஹோமர் விளம்பியவாறு 'யௌவனப்பருவத்தில் புணர்ச்சியும்' எல்லாராலும் வேண்டப்படும். இயற்கையாகவே ஒருவர் ஒரு இன்பத்திலும் மற்றொருவர் மற்றோரின்பத்திலும் வேறொருவர் வேறோர் இன்பத்திலும் ஆசைப்படுவர். சிறப்பாய இன்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அளவுகடப்பர். இன்புறத்தகாதனவற்றிலும் கீழ்மக்கள் ஆகிய தூர்த்தர் இன்பம் விழைவர்; துன்பம் நிகழ்ந்தழித் துன்புற்றுவருந்துவர்; எவற்றில் அதிக இன்பமுண்டோ அதையே நாடுவர். சமனறிந்து ஒழுகுபவன் இன்புறுங் காலம் இடம் அறிந்து தகுந்தவாறு மிகாமலும் குறையாமலும் அளவுடன் இன்புறுவன்.

## 12-ம் அதிகாரம். தூர்த்தகுணம்.

தூர்த்தத்தன்மை கோழைத்தன்மையிலும்பார்க்க நிச்சயிக்கப்பட்டதில்லென்பர். தூர்த்தனைக் கோழையினும்பார்க்க இகழுகிறோமல்லவோ? கோழைத்தன்மை இயற்கையாய் உள்ளது. இடையிடையே தோன்றும் பண்பாகலான் அதை நீக்குவதற்குப் பயிற்சிசெய்ய இயலாது. கீழ்மை குறைவதற்கு நற்செயலில் இடைவிடாது பயிற்சிசெய்யவேண்டும். தூர்த்தரும் குழந்தைகளும் புத்திவழி ஒழுகாது புலன்வழிச்செல்வதால் தூர்த்தகுணம் குழந்தையின் குணத்திற்கு ஒப்பாகும். ஆசை தீர்க்குந்தோறும் தீர்க்குந்தோறும் பெருகுதலான், ஆசையை அளவுடன் தீர்ப்பேமாக.

[தொடரும்.]

த. இராமநாதபிள்ளை, B.A.

---



இமையா முக்கணு மிருகணி விமைப்ப
எண்டோட் குவடு மிருதோட் குவடுறக்
கஞ்சனும் விசும்புங் காணு முடியும்
அரியொடு பாதல மறியாப் பாதமும்
கைபுனை வினையருங் கதிர்மா மகுடமும்
திருப்பா தகையுஞ் செறுநருங் காண
நான்மறைக் கொளித்து முத்தமிழ்க் கிரங்கி
விண்ணவர் தெய்வ மண்ணவர்க் கிறையாய்ப்
பாவடி விகந்து நரவடி வெய்தி
முயலாத் தகைமை முயற்சியிற் பயின்று
பூழியர் குலத்து வாழிவந் துதித்துக்
கொய்யுளைப் புரவியுங் கைம்மதா சலமும்
ஒற்றை யாழியுங் கொற்றவெண் குடையும்
திருவொடு தாங்கிப் பொருவிறல் விளங்கத்
தென்கூ டலிலமர் தெய்வக் கோமகன்
செய்யசெந் தமிழுறி வையையந் துறையும்
தென்றற் குழவியு மன்றற் சாந்தமும்

---

4–9. "கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி, மையவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து, விரிசடை மறைத்து மணிமுடி கவித்து, விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதி யாகி முழுதுல களிக்கும், பேரரு ளாயகன்" (கல். 2:9–14); "சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து நறுங் கொன்றையந்தார் தணந்து வேப்பந், தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி, விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமருமகனாகி மீன நோக்கின், மடவாளை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம்" (திருவிளை. கடவுள்.) 13–6. கைபுனை வினையர்–அலங்கரிப்போர். 14. செறுநர்-பகைமன்னர். 16. தெய்வமாகிய தாம். 19. பூழியர்-பாண்டியர். வாழி: அசைநிலை. 21. ஒற்றையாழி-ஆஞ்ஞாசக்கரம். கொற்றம்-அரசவுரிமை. 24. சம்பந்தமூர்த்தியின் திருப்பாசுரம் வரைந்த ஏடு எதிரேறிச் செல்லுதற் கிடமாயிருந்தமையின் தமிழறி வையை யென்றார்; "அனலும் புனலு மியலறியும்" (திருவால. காட்டு. 3) என்பதன் குறிப்பைப் பார்க்க; "தமிழறிந்துவை திகமுடன் சைவமுநிறுத்தும், அமிழ்தவெண்டிரை வையை" (திருவிளை. நகரப். 17.) 25. தென்றற் குழவி–இளந்தென்றல்; "சிறுகாற் குழந்தாய்" (தென்றல்விடு. 112.) மன்றல்-மணம்.

விரிகட லடக்கிய குறுமுனிக் கடவுளும்
கருணையொடு வழிந்த பொருநைச் செல்வியும்
தலையுற நிமிர்ந்த மலையமால் வரையும்
கங்கைமா நதியுங் கயிலைக் குன்றமும்
பொருவுசீர் தழைத்த பூந்துணர்க் கற்பகம்
கயல்விழிக் கொம்பிற் றுயல்வருந் தீங்கனி
நிருத்த மேற்ற திருத்தாண் முளரியை
எழுதா மறையெனும் பழுதறு நன்மலர்
நான்முறை சொரியு நான்முகத் தொருவனும்
காங்குவித் தேத்திக் கண்மலர் பறித்திட்
டடியிணை வணங்கு முடியுடைச் செல்வனும்
ஏவல்புரிந் தொழுகுந் தேவர்க ணிற்பக்
கைத்தா மரைகொடு பொற்று மரையெடுத்
தருச்சனை புரிந்து பொருப்பொடு மிகலும்
இந்திர விமானந் தந்தருள் வேந்தனும்
வருந்த நோக்கித் திருத்தாண் மாறி
ஆடெனச் சொன்ன வருளுடைக் கோவும்
திருப்பெய ரொன்றுற் சேயிழை தடுப்ப
இளமை நீத்த வளமைத் தொண்டனும்

---

27. பொருநை-தாமிரபர்ணி. 28. மலையமால்வரை-பொதியின்மலை. 25–8. தென்றற்குழவி முதலியன பொதியிலுக்கு அடை; "கும்பத் துதிக்குங் குறுமுனியு-மம்பிற்போய், நந்தமிழுந் தண்பொருநை நன்னதியுஞ் சேர்பொருப்பிற், செந்தமிழின் பின்னுதித்த தென்றலே." (தென்றல்விடு. 3–4.). 24–30. வையைத் துறைக்குக் கங்கையும் பொதியிலுக்குக் கயிலையும் உவமைகள். 31. கயல்விழிக்கொம்பு—மீனாட்சியம்மை. துயல்வரும்—அசையும். தீங்கனி-சொக்கநாதர். 32. நிருத்தம்-நடனம்; "நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண், ஒருத்தன்" திருச்சிற். 62.

33-முதல் 48-வரை திருவடியை வேண்டேற்குரிய பழவடியார் கூறப் படுகின்றனர்.

33. வேதமாகிய மலர்களை. 36. செல்வன்-திருமால். 40. வேந்தன்-இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். சூ. 5.) 42. கோ-இராசசேகர பாண்டியன். 43. திருப்பெயரொன்றென்றது திருநீலகண்டமென்பதனை. 44. தொண்டன்-திருநீலகண்டநாயனார்.



கொள்ளைத் துயர்தீர் பிள்ளையைச் சமைத்துச்
சுவையமு தூட்டு நவையறு மன்பனும்
வஞ்சனை விளக்கு மலர்விழிக் குருகிக்
கண்ணிடந் தப்பு மண்ணலு மொழிய
அஞ்செழுத் தேறு தெஞ்சிய நாவும்
வெண்ணீ றணியாப் புண்ணா றுடலமும்
கூடலைக் காணாப் பாடுறு கண்களும்
மூவர்சொற் கேளாத் தாவுறு செவியும்
பணியா நாளைப் பிணிநா [1]ளெனவுயிர்
அழிந்துகெட் டுயிர்ப்ப தறியா நாசியும்
பொன்னெயி லெடுத்த மன்னிருங் கோயில்
சூழாத் தாளுந் தாழாச் சென்னியும்
குவியாக் கரமு மலராச் சிந்தையும்
தினந்தின மேம்பட நாடொறுங் கடைப்படு
மாணாச் சிறுமையிற் பெரிய
வீண னேனும் வேண்டுதல் வழக்கே. (கங)

வெண்பா.

கச. வேண்டுதலை மாமதுரை வித்தகர்க்கேற் றும்மனமே
ஆண்டுதலைப் போவ தறியாமற்—பூண்டுபொருள்
வேட்டுமுயல் வாய்மதிவெங் கூற்றினுக்கு நீயோர
வாட்டு முயல்வாய் மதி. (கச)

---

48. அண்ணல்-கண்ணப்பர்.

49–60. நூலாசிரியர் தமது சிறுமையைக் கூறுகின்றார்.

49. எஞ்சிய-குறைந்த. 51. பாடு-படுதல்; நித்திரை. 52. மூவர்-ஞானசம்பந்தர் முதலியோர்கள். சொல்-தேவாரம். தா-கேடு. 60. வழக்கே-வழக்காகுமா? "இகழ்தல் வழக்கே" இ. கோ. சூ. 6.

முளரியை (32) வேண்டுதல் (60) என்று கூட்டுக.

கச. வேண்டுதலை-விரும்புதலை. தலைப்போவது-செல்லுதல். மதி-அடிக்கின்ற. அரா வாட்டு மதி; முயல்வாய் மதி.

[பி-ம்.] [1]எனவுயிர்த் தழிந்து.

## கலித்துறை.

கரு. மதித்தீ ரிலைகொலோ னலன் வாட்டந் தழன்மதி யீட்டங்கண்டும்
கொதித்தீ ரிலையன்னை மீருமைப் போலவுங் கூற்றமுண்டோ
நதித்தீரஞ் சூழுங் கடம்பா டவிச்சொக்க நாதர்க்கன்பு
பதித்தீ ரிலையுங்கள் பாடுந் துயரமும் பார்த்திடவே. (கரு)

## அகவல்.

கசு. பாரா வாரப் பேரொலிப் போர்வேல்
சினத்தொடு துளைக்கச் செவித்துணை கொடுத்துச்
சந்தொடு பிறந்த மந்தா நிலமெனும்
ஐவாய்ப் புலியை மெய்யுறத் தழுவி
வெண்பிறை யிழைக்குஞ் செந்தீக் குழம்பை
அள்ளிக் குழப்பி யணிமுலைக் கணிந்து
கொலைக்கரும் பெடுத்த கூற்றொடு மெதிர்த்துக்
கங்குல் யானையின் சங்கிலி பிடித்து
வரிச்சிறைக் குயிலின் வாய்விடங் குடித்துக்
குறையாத் துயரு நிறையாச் சிந்தையும்
அழியாக் காமமு மழிந்தபே ரறிவும்
சிறியேன் சுமந்து பெரியோர்ப் பகைத்துத்
தள்ளருங் காதல் வெள்ளத்திற் படிந்து
கனதனக் குன்றிற் கண்மழை யருவி
ஆரமுஞ் சந்து மகிலும் வாரப்

---

கரு. ஈட்டம்-ஈண்டுதல். நதித்தீரம்-வையைக்கரை. பாடும்-கஷ்டமும். பார்த்திட-பார்த்து நீக்க. தம் துயரத்தை அவர்கள்மேல் ஏற்றிக் கூறினர். இது தலைவிகூற்று.

கசு. பாங்கி மேகத்தைத் தூதுவிடுதல்.

1. பாராவாரம்-கடல். ஒலியாகிய வேல். 3. சந்து-சந்தனம். சந்தனமும் தென்றலும் பொதியிலிற் பிறந்தவை. 4. ஐவாய்ப்புலி-சிங்கம்; பஞ்சானனம் என்னும் பெயரை நினைந்து கூறினர்போலும்; சிங்கத்தை வயப்புலியென்பர்; திவாகரம், 3:1. 5. செந்தீக் குழம்பென்றது நிலாவை. 7. கூற்று-மன்மதன். 8. இரவு மன்மதனுக்கு யானை. இரவோடு போராடி என்பது கருத்து. 9. குயிலோசையாகிய விடத்தை. 12. பெரியோர்-செவிலித்தாயர் முதலியோர். 15. ஆரம்-முத்து. சந்தும் அகிலும்-சந்தனக்குழம்பையும் அகிற்குழம்பையும். மலையருவி முத்து சந்தனம் அகில் முதலியவற்றை வாரிச்செல்லுதல் இயல்பு.



புதுமலர்க் கொன்றை யிதுவெனப் பொன்பூத்
தொருவே ளைங்கணை யுருவுசெங் குருதிக்
குன்றுந் தோன்றியுங் கோபமும் படா
நிறையுங் கன்றுங் கலையுஞ் சோர்தரக்
கதுப்புங் கொள்கையு முடிக்கமுடி யாமே
புண்படு விழிப்பே கண்படை யாகத்
தனியே துணையாத் தளர்வெனும் வலியோ
டாயிழை யொருத்தி யாவியோ டிருந்தமை
அகல்வான் பரந்து விரிகடல் குறுகி
வெண்டிரை குடித்துக் கருஞ்சூற் கொண்டு
பானிற மொழித்த பச்சிளம் புயல்காள்
அம்புய வரிவளை யாவியு மனமும்
கண்களி னிறைந்த காவிரித் துறையும்
வையைத் துறையுஞ் செய்யசெந் தமிழ்தேர்
கூடலு முடைய கோமான் சிறுமான்
ஏந்திய பெருமா னெம்மான் றனக்குப்
பரிவொடு விரைந்துசென் றோடி
வரையா துரைத்து வருவீ ரின்றே. (கசு)

---

16. கொன்றை கார்காலத்தில் மலர்வது. பொன்-பசலை. 17–8. உருவு செங்குருதி-உருவுதலாலுண்டாகிய இரத்தம். குருதியாகிய தோன்றியுங் கோபமும்; கோபம்-இந்திரகோபம். இவையுங் கார்காலத்துக்கு உரியன. 19. நிறை-மனத்தை நிறுத்தற் றன்மை. கன்று-வளையல். கலை-ஆடை. 14–9. "உண்ணிறை யுயிர்ப்பெனு மூதை யூர்தரக், கண்ணீர்ப் பெருமழை பொழிதலி னெண்ணிறத், தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி யெஞ்சா, மணியும் பொன்னு மாசறு வயிரமும், அணிகில ரகிலு மாரமு முரிஞ்சிக், கொங்கை யென்னுங் குவட்டிடை யிழிதர" (திருவாரூர் மும். 1.) 20. கதுப்பு-கூந்தல். முடிக்க:கிலேடை. 22. தனியே துணையா: "தானுந் தனியுமா யிருந்துட றளர்ந்தான்" (நைடதம். அன்னத்தைத்தூது. 36.) 27. அம்புய வரிவளை-தாமரை போன்ற கையில் வரியையுடைய வளையையணிந்த தலைவியினது. ஆவி-உயிர். 28. கா விரித்து உறையும் வையை; கா-சோலையை. 30. கூடல்-மதுரை. 27–30. ஆவியும் மனமும் வையைத்துறையும் கூடலுமுடைய கோமான். 30–31. "எம்மா னமரர் பெருமானம் மான்கோமான், எம்மானம் மானையுனக் கீயுமோ", (தேவையுலா, 191.) 33. வரையாது-நான் சொல்வதை விலக்காமல்.

### வெண்பா.

கஎ. இன்று கிளுமறிவீ ரேழைகா ளீசனருள்
குன்றுத நான்மாடக் கூடலுக்குட்—சென்றால்
துறக்கத் தசையானீர் சும்மா நமன்மென் (கஎ)
றிறக்கத் தசையானீ ரே.

### கலித்துறை.

கஅ. ஏழா யுனக்கினி யின்னமுண் டோதெய்வ மேவருக்கும்
ஊழாய் வெருண்டநஞ் சுண்டானு முற்பத்தி யுந்திதியும்
பாழாய் விடச்சங் கரிப்பானுங் கூடற் பரமனென்றால்
வீழா யவனடிக் கேநெஞ்ச மேதஞ்சம் வேறில்லையே. (கஅ)

### அகவல்.

க௯. வேறுவே றுருவ மாறு தெடுக்கும்
ஊழொடு மனந்த யோனியிற் புகுந்து
கருக்குழி நரகப் பெருக்கிற் கிடந்து
பின்னே ருடலெனும் வெந்நர கடுத்துப்
பொருள்கவர் மாத ரிருமனம் போலத்
திருக்கொடு பிணைந்து நெருக்கு மாலையிற்
றீதுற நெருக்கிக் கோதெனத் தள்ளும்
பிறவித் துன்பத் துறுதுயர் தொலைத்துத்
தூரச் சலதி தூரினுந் தூரப்
படுகுழி யுதாத் தடுவினைக் காட்டத்

கஎ. சென்றால் அருளை அறிவீர். துறக்கத்து அசையால்-சுவர்க்கலோகத்தி லுள்ள ஆசையால்; அசைபால்: குறுக்கும்வழிக் குறுக்கல். இறக்க-உள்ளே இறக்க. தசை-இறைச்சி. ஆனீரே:விளி. சென்றால் துறக்கத்தசையினின் றும் நீங்கிரென்பதும் ஒரு பொருள். துறக்கம்-சிவலோகம்; தசை-நிலை; ஆனீர்-நீங்கிர்.

கஅ. ஏழாய்-அறிவிலியே. ஊழாய்-முடிவைச் செய்வதாய். திதி-காத்தல்.

க௯. 3. கருக்குழியாகிய நரகப்பெருக்கு. 4. உடலாகிய நரகம்; 'அழுக்கே னாகத்து' (திருச்சிற். 166, பேர். உரை பார்க்க.) 5. மாதர்-வேசையர்; "இரு மனப்பெண்டிரும்" (குறள். 920.) 9. சலதி-கடல். 10. காட்டம்-விறகு.



தாசைக் காற்றிற் றேசுற வெழுந்து
மேன்மைப் பஞ்சையு மானச் சருகையும்
கடிதிற் காயுங் காய்பசித் தீயை
எய்யாப் பொழுதெனு நெய்யால் வளர்த்துப்
பிரித்திட லரிதாய்ப் பிறப்பிறப் பொன்றாய்
அற்ற நோக்கி யவ்வயிற் பாக்கும்
வெயிலோ டிருளென மெய்யிற் காந்தங்
குயிரீர் வனவா முறுபிணிக் குரித்தாய்த்
தெறுகலிப் புலியுஞ் செல்வப் பேயும்
உறுபகைச் சுறவு மொழியாக் காமமும்
போர்வாள் போலரிந் தீர்வா ளெனவீர்ந்
தரம்போ லராவி யழித்தா றலைப்ப
ஈற்றுக் காலக் கூற்றுவன் விடுத்த
தூதெனக் குறுகிக் காதலுங் களிப்பும்
வன்மையும் வனப்புந் தன்மையு மொளித்து
நரையுந் திரையு நரம்புங் காட்டிக்
காலுங் கோலாக் கண்களுங் கையா
அம்மியுங் கறையுந் தம்மெயி றாக்கும்
மூப்பிற் றிளைத்து நீப்பருந் துயர்தரும்

12—3. "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந்தவ முயர்ச்சி தாளாண்மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்போம் பறந்து" (நல்வழி, 26.) 14. எய்யா-குறையாத. 17—8. "மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்வினை, காலமோர்ந் துடனுறை கடிய நோயனான்" (கம்ப. சூர்ப்ப. 8); "உடன்பிறந்தே கொல்லும் வியாதி" (மூதுரை, 20.) 19. கலி-வறுமை; கலிப்புலி: "மெய்யா வறுமைப் புலிதான் மிகவும் வெருட்டுகின்ற தையா" (சங்கர சிந்தாமணிப்புலவர் பாடல்.) 21. ஈர்வாள்-வாளரம் (ரம்பம்.) 23. ஈற்றுக் காலம்-முடிவுகாலத்தில் வரும். 25. ஒளித்து—மறையச் செய்து. 27. காலுங் கோலா: "தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி" (சிலப்.15:44, அடியார்.); "முக்காலுக் கேகாமுன்" (காளமேகக் கவிராயர்பாடல்). கண்களும் கையா: கைகளால் தடவும் நிலையைக் குறிப் பிட்டபடி; "கைத்தலங் கண்ணாய்" (தண்டி. சூ. 68, மேற்.) 28. கறை-உரல்; உண்ணப் படுவனவற்றை, கடிக்கப்படுவனவற்றை அம்மியிலும் உரலிலும் பொடிசெய்துண்பதைக் கருதியது.

24—9. குறுகி, ஒளித்து, காட்டி, ஆக்கும் மூப்பு என இயைக்க.

[1]குறிகளு மாணக் குறுமுளை யரும்ப
உழுந்துருள் போழ்திற் கழிந்திடு மின்பம்
நெடுநாட் கழியா [2]நிரயத் தெய்திப்
பெரும்புழு வாகிச் சிறுபுழு வரிப்ப
ஊறுசெய் துடற்றிக் கூறிடு முடலம்
கழிந்திடு நாளைக் கடன்மீன் போல
உப்பிற் குளித்துத் [3]தப்பின் றூணெனக்
குருதியிற் றோய்ந்து பருதியிற் கிடந்து
நீலத் தூணைப் போலவுங் கன்றி
நெருப்பெரிந் தொழுகு மிருப்புத் தூணை
மனப்போன் மாதர் தனப்போற் றழுவி
இனையன பலவா மியாதனை யகற்றி
உள்ளுறு காலையிற் றள்ளிய காமமும்
சிறக்கும் போழ்திற் றுறக்குஞ் செல்வமும்
பசியிற் பொருந்தப் பொசியா வூணும்
இவ்வயிற் புணரா தவ்வயிற் புணர்ந்து
தானவர்க் கஞ்சும் வானவ ராகிக்
கண்படை யொழியக் கனவொழிந் தவர்போற்

31. உழுந்துருள் போழ்தின்: "உழுந்து பெருமுன் றிசைதிரிந் திறப்பல்" (கம்ப. வாலிவதை. 61); "உழுந்துருளு மெல்லைதனில்" (வி-பா. அருச்சுனன் றவநிலை. 106); "ஆடி யுழுந்துருள் போதில்" (சொருபானந்தர் நான்மணி மாலை, 29); "உழுந்துருள் பொழுதின் மீள்வேன்" (சீகாளத்தி. கண்ணப்ப. 105.) இன்பம் கழிந்திடும். 32. நிரயம்-நரகம்.

33–41 வரையில் நரகவேதனை கூறப்படும்.

34. கூறிடும்-துண்டப்படுத்துகின்ற. உடலம்-யாதனா சரீரம். 35. கழிந்திடும்-மிகுகின்ற; நீங்குதலுமாம். 36. தப்பின் றூணென-பவளத்தூணைப் போல. 37. பருதி-சக்கரம்; வெயிலுமாம்.

42–4. இவற்றிற் கூறியவை சுவர்க்க இன்பங்கருதி இவ்வுலகத்தில் ஆற்றிய தவச்செயல்கள்.

45. இவ்வயின்-இவ்வுலகத்தில். அவ்வயின்-சுவர்க்கலோகத்தில். 47. இனிய கனவைக் கண்டவர்கள் கண்கள் விழித்தவுடன் அவ்வின்பத்தைத் துறந்தாற்போல.

[பி-ம்.] [1]குறிகொளு. [2]நிரையத் தெறிப். [3]தப்பிற் றூணெனக்.



புண்ணியம் புலரப் போகமு நீங்கி
இம்பரு நரகமு மும்பரு மொன்றாய்ச்
சுழலுங் கறங்குஞ் சுற்றுந் திரிகையும்
ஓடுஞ் சகடமுங் கேடறச் சுற்றி
எல்லா விடனு மெள்ளா ரிடமாம்
ஒவ்வோ ரிடத்தி லுடம்பெலா மெடுத்துப்
பிறந்திறந் தழியும் பெற்றிமை பற்றி
ஆக்கவுங் காக்கவு மழிக்கவுஞ் சலிக்கும்
மூவருக் காகக் கேவலத் தழுந்திக்
குறிஞ்சித் தேனைக் குறைவறச் சொரிந்து
காஞ்சிரை வளர்த்துக் கனிபருந் தவர்போற்
கணிப்பரு முயற்சியிற் கைதவம் பெருக்கி
இன்னண முழலு மேழைமை போக்கிப்
பாலிற் றோன்றியப் பான்மையை மாற்றுமோர்
பிறப்பிற் [1]றோன்றிய பிறப்பினை யழிக்கும்

48. போகம்—சுவர்க்க இன்பம். 49. இம்பர்-இவ்வுலகம். நரகம்-நரகலோகம். உம்பர்-சுவர்க்கலோகம். 50. கறங்கு-காற்றாடி. திரிகை-மாவரைக்கும் இயந்திரம்; "ஆடுங் கறங்குந் திரிகையும் போல வலைந்தலைந்து" (தாயுமானவர். பாயப்புலி. 56.) 51. சகடம்-வண்டிச் சக்கரம்; ஆகுபெயர். 52–3. எள்ளாரிடமாம் ஒவ்வோரிடத்திலும்-எள்ளென்னும் தானியமிருக்கும் இடந்தோறும். 56. கேவலம்-கேவலாவத்தை. 55–6. "திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில், ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில், அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே" (திருநா. தே.) 57. குறிஞ்சித் தேன் மிகவுயர்ந்தது. 58. காஞ்சிரை-எட்டிமரம். 59. கணிப்பரு-அளவிடுதற்கரிய. கைதவம்-வஞ்சனை. 60. ஏழைமை-அறியாமையை. 61. பாலில் தோன்றி-பாலில் உண்டாகி. அப்பான்மையை-அந்தப் பாலின் தன்மையை. மோர் மாற்றும். அதுபோல. 62. பிறப்பில் தோன்றிய-பிறப்பெடுத்த ஆன்மாக்கள்; தோன்றிய: வினையாலணையும் பெயர். அழிக்கும்-சிவஞானத்தால் அழிக்கும். 61–2. இடைப்பிறவரல். அழிக்குமென்பதன்பின் ஆதலால் என ஒருசொல் வருவிக்க.

[பி-ம்.] [1]தோன்றியப் பிறப்பினை

பெருங்கடற் பேறு சிறுதினை யளவினும்
சுருங்கிய முயற்சியி னிரம்புங் கொள்கையின்
கோடுக ணிமிர்ந்த வாடகக் குன்றும்
தெண்டிரைக் கடல்சூ ழண்டச் சுவரும்
பொடிபடு காலையு நெடுவான் சுமக்க
இந்திர னமைத்த சுந்தர விமானமும்
கதிரொளி விரிக்கும் கபாலிநீண் மதிலும்
பொற்றா மரையுஞ் சொற்றமிழ்ச் சங்கமும்
கூடலு முடைய கோமான் றிருவடித்
தாமரைப் போதிற் றேமல ரின்றியும்
தணவாக் காட்டின் மணவாப் பச்சிலை
இளந்தளி ரொன்றி னெவ்வள வேனும்
கிள்ளித் தெறித்துத் தள்ளருங் களிப்பும்
ஞான நாட்டமு மூனமில் யாக்கையும்
விழையாச் சிந்தையு மழியா வீடும்
துறவியிற் புகுந்திடர் கொள்ளா
தறிவிற் பெரியீ ரடைந்திடு மின்னே. (ககூ)

---

63–4. கடற்பேறு-கடல்போன்ற பயன். தினையளவுமுயற்சியினால் பெருங் கடலளவு பயனும் பெறப்படும் கொள்கையினாலே; "சிறுமுயற்சி செய்தாங் குறு பயன் கொள்ளப், பெறுமெனிற் றாழ்வரோ தாழார்" (நீதிநெறி. 70.) 65. கோடு கள்-சிகரங்கள். ஆடகக்குன்று-மேருமலை. 66. அண்டச்சுவர்- அண்டபித்தி. 69. கபாலி மதில்-இது வெளிமதிலுக் குட்பட்டதென்பர்; "காட லால வாயிலாய் கபாலி நீள்க டிம்மதிற், கூட லால வாயிலாய்" (தே. திருஞா.) 73-4. பச்சிலை இளந்தளி ரிவற்றுள் ஒன்றில். 73. "யாவர்க்கு மாமிறை வர்க்கொரு பச்சிலை" (திருமந்திரமாலை, 252); "போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு" (திருக்கழு மலமும்மணி. 12); "குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க்கு" (திருவிளை. 44:34); "கண்ணுண்டு காண......பல் பச்சிலையா லெண்ணுண்டு சாத்த" (பட்டினத்.)

களிப்பு (75) முதல் வீடு (77) இறுதியாக உள்ளவற்றை அடைந்திடுமின் (79) என்க.

போக்கி (60), தெறித்து (75) அடைந்திடுமின் (79.)



வெண்பா.

உ0. அடையலரும் பூவா பணிமதுரைச் சொக்கர்
தொடையலருங் காவெனக்குச் சொல்லாய்—விடைமணியின்
பாரம்பா ராய்வான் பனிமதிபா ராயினிவேள்
போரம்பா ராய்வான் பொர. (உ0)

கலித்துறை.

உக. பொருந்தா ரணிமதி லின்னம் புகைந்து புகைந்தெரிய
வருந்தா ரணியில் வரும்பெரு மான்மது ரைப்பெருமான்
திருந்தா ரணியும் பெருமான் றிருப்பத மேசுதியா
இருந்தா ரணிய ரிமையோர்க்கு மூவர்க்கு மியாவர்க்குமே. (உக)

அகவல்.

உஉ. பாவையும் படைத்த தேவரைப் பணிந்து
நெறிப்படி நோற்றுங் குறித்தமை கொள்ளார்
கடற்பெருஞ் சேனையு மடற்போ ராற்றலும்
அரணொடு மடைந்தோர் மூரணிலர்க் குடைவார்
ஐயந் தீர்ந்து கைவரு மருந்து

---

உ0. அடையல் அரும்பூவாய்—அடைதற்கரிய நாகணவாய்ப் பறவையே. தொடை அலரும் கா-மாலைக்குரிய கொன்றைப்பூமலரும் வனத்தை. விடைமணி-காளைகளின் மணி; இது விரகிகளுக்குத் துன்பமுண்டாக்கும். பாரம்-கனம்; இங்கே மிக்க துன்பம். பாராய்—ஆராய்ந்து பார். வேள்—மன்மதன். போர் அம்பு ஆராய்வான்—போருக்குரிய அம்புகளைத் தெரிந்தெடுப்பான். பொர ஆராய் வான். நீ தூதுசென்றுவா வென்பது கருத்து.

உக. பொருந்தார்—பகைவர். மதில் இன்னம் புகைந்து புகைந் தெரிய வென்றது பொருளதிசயவணி; "பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும், அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை, வல்லி தழுவக் குழைந்த வடமேரு, வில்லி நுதன்மேல் விழி" (தண்டி. சூ. 53, மேற்.) வரும் தாரணியில்—வருகின்ற பூமியாகிய தேரில். திருந்து—திருந்திய. ஆர்—ஆத்திமாலையை. அணியர்—ஆபரணம்போன்றவர்கள். இமையோர் முதலிய யாவருக்கும் அணியர்.

உஉ. 1–14. திருவருளாலன்றித் தம் முயற்சியினால் ஆவது ஒன்று மில்லை யென்பது கூறப்படும்.

4. அரண்—மதில், ... முதலியன. மூரணிலர்—வலியில்லார்.

பற்பல வருந்திய மற்பநோ யகலா
நெஞ்சாற் கைத்தல நெல்லியிற் கண்ட
அஞ்சனம் பெற்றோ ரரும்பொருள் பெறுஅர்
அவையுறு மகத்தி லவிபெறச் சென்றோர்
ஆற்றலுக் கிசைந்த வவயவ மிழப்பார்
திருப்பாற் கடலிற் பொருப்பினை நாட்டி
அமுதங் கடைந்தோ ராலமங் கடைவார்
அதலி னின்னைக் காதலிற் பணியும்
இயல்பொன் றிடக்க முயல்வதொன் றறியேன்
அடவியிற் கிடந்து புடவியைக் கிளைத்து
மூக்காற் றேடி நாக்கா லருந்தும்
பன்றிக் குருளைக் கொன்றுத் திருமுலைப்
பாலமு தளித்துப் பாலமு தருந்தி
அரியணைப் புறத்தி லரசனோ டிருந்து
பூண்டபே ரறிவைத் தூண்டுகோ லென்னத்
தந்திர முரைக்கு மந்திரி யாக்கி
நிமிர்தரு புனலிற் றிமிர்தரு பாதமும்
வளைதயிற் சிலிர்த்த மேதகு சிறையும்
தாங்கிக் கயல்பார்த் தேங்கிய நாரைக்
கெய்தா முத்தி நொய்திற் கொடுத்துப்
போதார் மதுரை மூதூர்க் கடுத்த

---

8. அஞ்சனம்—புதையலைக் காட்டும் மை. 9. அவை—கூட்டம். மகத்தில்—யாகத்தில்; தக்கன் யாகத்தில். அவி—அவிர்ப்பாகம். 10. அவயவம் இழப்பாரென்றது தக்கன் யாகத்தில் இந்திரன் முதலியோர் தங்கள் தங்கள் உறுப்புக்களை இழந்தமையை நினைந்து. 15. அடவியில்—காட்டில்.

15-21. இவற்றிற் பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டி மந்திரியாக்கியது முதலிய அருமைத்திருவிளையாடல்கள் கூறப்படுகின்றன.

15-7. பன்றியின் சாதித்தன்மை. 20. அறிவை—அரசன் அறி—. 20-22. தூண்டுகோல் மந்திரிக்குவமை. 22-4. நாரையின் சாதித்தன்மை. 22-5. நாரைக்கு முத்தி யளித்த திருவிளையாடல். 23. வளை—வாடைக்காற்று. 25. நொய்தின்—எளிதில்.



இனமழை யொழித்து வருமலை யகற்றிக்
குரைகட லேழு மிரையாது வந்து
குண்டிற் கிடக்கப் பண்டழைத் தருளிப்
புரந்தரன் பணியாற் [1]பரந்துறு வேலையை
வேற்றலை முடிக்கு மாற்றலை விளைத்து
மகத்திற் றோன்றிச் [2]சகத்தினை யழிக்கும்
ஈற்றான் பகையை யேற்றாற் போக்கி
எழில்வந் தொழுகிய கயற்கண்
குழல்புரை கடப்ப நிழலிருந் தோயே. (௨௨)

### வெண்பா.

௨௩. இருபதமு முக்கண்ணு மென்கருத்தே நான்கு
சுருதிமுக மைந்துமென்று தோன்றும்—பொருகருடப்
புள்ளன் படையாப் புரமெரித்த கூடலிறைக்
குள்ளன் புடையா வுனக்கு. (௨௩)

### கலித்துறை.

௨௪. உனக்கன்று காண்மட நெஞ்சே கனிந்துநெக் குள்ளுருகி
மனக்கன்று வாட்டமுங் கண்ணீரு மாக வணங்கினர்க்கே

---

27. இனமழையொழித்தது நான்மாடக்கூடலான திருவிளையாடலால் உணரப்படும். அலை—சமுத்திரம்; வருணன்விட்ட கடலை வற்றச்செய்தது. வரும் மலை யெனப்பிரித்துச் சமணர்கள்விட்ட யானை யென்று பொருள் கொள்ளலுமாம். 29. குண்டு—பள்ளமான தீர்த்தம். 30-31. இது வருணன் செய்ததாயினும் தலைமைபற்றி இந்திரன்மேலேற்றப்பட்டது. 32. மகம்—சமணர் செய்த யாகம். 33. ஈற்று ஆன்—கன்றையுடைய பசு; சாதியடை. ஏறு—ரிஷபதேவர். 34. கயற்கண்—அங்கயற்கண்ணம்மை. 35. கூந்தலுக்கு கடப்ப மரம் உவமை.

௨௩. கருத்தே: விளி. இருபதமுதலியன என்று தோன்றும்? நான்கு சுருதியை அருளிச்செய்த ஐந்து முகம். கருடப்புள்ளன்—திருமால். படையா—அம்பாக. கூடலிறைக்கு—சொக்கநாதருக்கு. உள்ளன்பு அடையார் உனக்கு என்று தோன்று மென்று முடிக்க.

௨௪. அன்று—கிடைத்தற்குரியனவல்ல. மடநெஞ்சே; மடம்—அறியாமை. மனவாட்டம்; கன்றுவாட்டம்; கன்றுதல்—தழும்புறுதல். வணங்கினர்க்கே உரியனவாகுமென ஒருசொல் வருவிக்க.

[பி-ம்.] [1]பரந்திடு காலையில். [2]சகத்தினை யறுக்கும்.

சினக்கன்று மானவர் பொற்றாளுஞ் சிவன்முத் தித்தலமும்
கனக்கன்று தாங்குங் கயற்கட் பிராட்டி கடாட்சமுமே. (உச)

அகவல்.

ரு. கடைபடுந் தமியேன் கடைபடு மத்தும்
வேவாய்க் குகையிற் றீவாய் மெழுகும்
பிறங்குநீர்ச் சேணிக் கறங்கலை மதியும்
தாமரைப் பாசடைக் காமரு புனலும்
ஊற்றிற் கிடந்த சேற்றுத் தூணும்
மேம்படக் கீழ்ப்பட மெலியா வறிவால்
நின்னது வடிவுந் தன்மையுங் கண்டு
சிறப்பொடு நின்று பிறப்பிறப் பொழிய
அந்தெனத் தோன்றி யறக்கடல் குடித்துத்
தந்தி யாகித் தவச்சேண் பறந்து
சிற்றெழும் பாகிப் பத்திவெற் பெடுத்துக்
குறுங்கைப் பால னெடுங்கட் பேழையும்
நீந்துவான் குழகித் தோய்ந்திடு மாபோற்
கொம்பற வுழுதலுஞ் சிறையறப் பறத்தலும்
இம்பரு மும்பரு மிருவருந் திரிய
யானுந் திரிந்தனை மியல்புடைத் தன்றால்

சினத்தையுடைய மான்கன்றை ஏந்தினவர். சிவன்முத்தித்தலம்—மதுரை; “சிவராச தானியாய்ச் சிவன்முத் தித்தலமுமாய்” (மீனாட்சி. பிள்ளைத். அம்புலிப். 6,) கன்று—வளையல், கடாட்சம்—கடைக்கட்பார்வை, பொற்றாள் முதலியன உனக்கன்று என்க.

உரு. 3. கறங்கு—சுழலுகின்ற. 4. தாமரையிலையிலுள்ள நீர். 6. கீழ்ப் படிதலில் மெலியாத; “மூடனை யெண்ணுங்கால் மூங்கி கிற்பரே” (பிரபு. மாயை கோலா. 10) என்றதுபோல. 9. அந்து—ஒருவகைப்பூச்சி; “அந்து ஆம்பிவண் டாதி காலவைந், திந்தி யம்பக ராநர் தேரார்” (மேருமந்த. வச்சிராயுதனுத்தரம். 11.) 14. கொம்பற உழுதல் ஆதிவராகத்தின் செயல்; “ஊழியா ழிக்க ணிருநில முருகெழு, கேழலாய் மருப்பி னுழுதோ யெனவும்” (பரி. 3: 23–4.) சிறைபறப் பறத்தல் பிரமாவின் செயல். 15. இம்பர்—இவ்வுலகில். உம்பர்—ஆகாயத்தில். இருவர்—திருமாலும் பிரமனும்.

தோய்ந்திடுமாபோல் (13) திரிந்தனை இயல்புடைத்தன்றால் (16) என்க.



விரும்பினர்க் கின்பந் தரும்பூ லோகத்
திதுசிவ லோகமு மெய்தாத் துவாத
சாந்தமுஞ் சிவன் முத்தியுந் தோய்ந்த
சுதையாற் கிளைத்த மதுரா புரியும்
ஆதலிற் பெறுதற் கரிதெனத் தேவர்
மணிப்பல திரடேண் மண்டபத் தெழுதிய
ஓவியத் தேவ ருடனினி திருக்கும்
ஆலவா யமுதங் காலன் கூற்று
வில்வேண் மறலி கல்விச் சொன்மலை
முருகனைப் பயந்த வொருதனிக் கடவுள்
மழைக்கடத் தருவிப் புழைக்கைக் கன்று
தவளநீ றுடும் பவளக் குன்று
துன்றிள மதியிருல் கிழிக்கும்
குன்றாக் கயிலைக் குன்றத் தோனே. (உரு)

வெண்பா.

உசு. குன்றுபோற் கோபுரஞ்சூழ் கூடற் குருமணியை
இன்றுபோய்க் [1]காணுங்கா ணேழையீர்—பொன்றுங்காற்
கையுங் கதையுமாய்க் காலனும் முன் னேவருதல்
பொய்யுங் கதையுமாய்ப் போம். (உசு)

18–20. சிவலோகமும்..........மதுராபுரி: “அத்திருமா நகரின்பேர் சிவநகரங் கடம்பவன மமர்ந்த சிவன், முத்திபுரங் கன்னிபுரந் திருவால வாய் மதுரை முடியா ஞானம், புத்திதரும் பூவுலகிற் சிவலோகஞ் சமட்டிவிச்சா புரந்தென் கூடல், பத்திதரு துவாதசாந் தத்தலமென் றேதுவிறுத் பகர்வர் நல்லோர்” (திருவிளை. தலவிசேட. 21.) சுதை—சந்திரனிடத்துள்ள அமுதம். கிளைத்த—வளர்ந்த. 25. கல்விச் சொன்மலை; “அறிந்தோர் சொன்மலை” (முருகு. 263.) 27. கன்று—விநாயகக் கடவுள். 27–8. “எங்கோன், போர் கொண்ட வெண்கோட் பொலன்குவடு பொதியும்வெண் பொடிதுடி யடித்து வைத்துப் புழுதியாட் டயராவொ ரயிரா வணத்துலவு போர்க்களிற் றைத்துதிப் பாம்” (மீனாட்சி. பிள்ளை. 1.) தவளநீறு—சிவபெருமான்திருமேனியிலுள்ள நீறு.

உசு. காண்: அசை. கதை—பொய்யாகக் கட்டிய வரலாறு; “கதை யெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்” சீவக. 2144.

[பி-ம்.] [1]கண்டாலும்

### கலித்துறை.

உஎ. போம்போது சுட்டுப் பொடியாக் கியவெறும் பூழ்திகன்மம்
ஆம்போதெல் லாமுடம் பாகவந் தாற்சுமந் தாற்றவனே
நாம்போது நீயஞ்ச லென்றே சென்ன நாகந்தள்ளித்
தேம்போ தடியிணை நல்காய்தென் கூடலிற் றெள்ளமுதே. (உஎ)

### அகவல்.

உஅ. தெள்ளமு தென்னத் தீவிடங் குடித்துத்
தள்ளருங் கடவுளர் தமக்கருள் கடவுள்
காவணத் துயர்ந்த பூவணப் பாதமும்
கொங்குதே ரேடகப் பங்கய முகமும்
மன்பெருஞ் சீருடைத் தென்பாங் குன்றொடு
சொல்விடை கேட்டுச் செல்விடை வெற்பெனும்
கொங்கையுஞ் சுமந்த கூடற் பூங்கொடி
உள்ளம் போன்ற வெள்ளிமன் றுடைய
கோவே நின்னைப் பாவாற் பாடேன்
வீழேன் சூழேன் றாழே னாயினும்
தந்தையைக் கொன்ற பிள்ளையு மல்லேன்
பிள்ளையைக் கொன்ற தந்தையு மல்லேன்
கல்லா லெறிந்திலன் வில்லா லடித்திலன்
வதைத்திடு மூன்கொடுத் துதைத்திலே னதனிற்
பொல்லே னல்லே னல்லேன் யானே
எனக்கே நின்னரு ளேனையோர்க் [1]கில்லென

---

உஎ. நாம்போதும்—நாம் பாதுகாத்தற்கு வருவேம். தேம்போது—தேனை யுடைய தாமரைமலரைப்போன்ற.

உஅ. 1. அமுதத்தை உண்ணுதல்போல.

**3–7. இனி, மதுரை ஒரு பெண்ணாக உருவகிக்கப்படுகின்றது.**

3. பூவணம்—திருப்பூவணமாகிய தலம்; மலரின் அழகென்பது வேறு பொருள். 4. ஏடகம்—ஒரு தலம்; இதழ்களையுடைய இடமென்பது வேறொரு பொருள். 6. விடைவெற்பு—ரிஷபகிரி; சோலைமலை 11. பிள்ளை—சண்டேசர். 12. தந்தை—சிறுத்தொண்டர். 13. சாக்கிய நாயனாரும் அருச்சுனனும் அல்லேன். 14. கண்ணப்பன் அல்லேன். 16. அருள் உரியதென ஒரு சொல் வருவிக்க.

[பி-ம்.] [1]இல்லையென



குருந்தேறி யவர்நாணங் கண்டு தண்ணங்
 குழைகொடுத்த கோபாலக் குழந்தை யென்றோர்
மருந்தேயெம் மெழுபிறப்பாம் பிணியை மாற்ற
 வருமருந்தென் றருந்தவத்தால் வாழ்வா ரன்றே. (ருஎ)

211† உடைமணியுங் கிண்கிணியுங் கறங்கா வண்ண
 மொதுக்கிமழ வொன்றடனு ளற்ற நோக்கி
யிடைமகளிர் மனையிடைபுக் கதன்பொற் றேண்மீ
 தேறிநிமிர்ந் திடக்கையுறி பிடியா மற்றைப்
புடைமலர்க்கை கொடுவெண்ணெ தொடுவுண் டந்தப்
 புதல்வனுக்கும் [1]பாத்தருத்திச் சிங்க நோக்கிற்
கடைநயன மணிவாயில் [2]பற்ற நின்ற
 காட்சிநினைந் தாடுவார் பாடு வாரே. (ருஅ)

212 கழைபிடிக்கும் பணிமொழியுங் கண்ண சோதை
 காணாது வெண்ணையுண்ட கள்வா வென்றே
பிழைபிடித்து மத்தினைக்கை பிடித்து மெள்ளப்
 பின்பிடித்தன் றாம்பினையே பிடியா முன்னங்
குழைபிடித்துக் கிண்கிணித்தாள் பிடிக்க நின்று
 கூத்தாடுங் குழந்தைகுழ கினையே யுள்ளத்
துழைபிடித்த திருஞான முனிவ ராய
 வுறுதவத்தா ரிருவினைவென் றுயர்ந்தா ரன்றே. (ருகூ)

213 கொன்றையந்தீங் குழலிசைக்கு நாத கீதக்
 கோபால மழகளிற்றைக் குழக்கன் றோடும்
வன்றிறலா னிரைகாக்கக் குன்ற மேந்தி
 மழைதடுத்த பச்சைமா கதவான் குன்றை
யன்றலகை கடுமுலைப்பா லருந்து மாபோ
 லாயுவினை யருந்துமட லரியை வாழ்த்தி
யெனதுநினைந் திறைஞ்சுமருந் தவத்தோர் பொற்று
 ளிறைஞ்சுதவத் தாரிருந்தா ளிறைஞ்சி னோனே. (௬0)

---

[பி-ம்.] [1]பருந்தருத்திச், பா. [2]பற்றி, சா. [3]நினைத் சு.

214 தழலிசைக்குங் கடுநெடுங்கட் கஞ்ச னேவுஞ்
சகடமுந்தண் டலைமருதுந் தகர்ந்து சாயக்
கழலிசைத்துத் தவழ்சிங்கத் தொழுகை யாற்றங்
கரைக்குருந்தன் றொசித்தகரக் களிறு காதக்
குழலிசைத்த செழுந்துகிர்வாய்க் குழந்தை யாயர்
குலக்கொழுந்து வெண்ணெயுண்ட குறைக்க சோதைக்
கழலிசைந்த தனிஞானப் பிள்ளை நீதி
யகத்துநினைந் துருகுமவ ரடியா ரன்றே. (௬௧)

215 மாகதக்குன் றெனப்பசுத்த காமர் மேனி
மதலைமுத லையின்மடுவுண் மம்மர் கூர்ந்த
காகதக்குன் றழைப்பவருங் களைக ணென்றே
கண்ணகன்ஞா லம்பரவுங் கருணை மாரி
விரகதனற் புண்மதஞ்சா திப்பான் வஞ்ச
வேடமனக் கொள்பவர்வே றறவே மண்மேற்
றாகதமாந் தனிமுதல்வ னமைதி நாடித்
துதித்துமனக் கொடுகளிக்குந் தொடர்புள் ளாரே. (௬௨)

வேறு.

216 காமபா சமுமறவி கைப்பாச முங்கடந்த காவ லாரந்
தாமமீ தினிவினிச்சென் றனுபவிக்கும் பேரின்பந் தனையு முந்நீர்ச்
சேமபூ தலத்திருந்தி னனுபவிக்கு முபயவியாத் தியினர் செம்மை
யேமபா தத்தினையே பணிவார்க்குங் கைவருமவ் வின்பந் தானே,

217 உருபமுனைக் கதிராழி வலத்தேந்து மெம்மானை
யும்பர் கோனை
யுருபமெனி லறியாதார்க் கருபமதாந் திருவுருவை
யகத்தே காட்டுங்
குருபரனுக் கடிமைநெறிக் கொள்வதல்லால் வேறுகுறிக்
கொள்ளா ஞானச்
சொருபரெனுந் தவமு னிவ ராக்கிலை யெவர்புகழச்
சொலவல் லாரே, (௬௪)



வேறு.

218 வேதா மதித்தருளு நால்வேத நுட்பமுற
வீறார் தமிழ்க்கவிதையா
லோதா தியற்புனித நாலா யிரப்பனுவ
லோயா முழக்கமொருசார்
தாதார் விரைக்கமல மாதார் புறத்தழுவு
தாதா வெனக்கருணைசான
மூதாதை யைக்[1]கவிஞர் பாமாலை யிற்பரவு
மூவா முழக்கமொருசார். (௬௫)

219 காமாதி கத்தில்வரு மோகாதி கப்படியு
காணு வுளக்கனுடையா
ரோமா குதித்துவை வாயா லொழுங்கியநெய்
யோயா முழக்கமொருசார்
பூமா தினைத்தழுவு மாமா லருட்குருகு
பூதா ருதித்தமறையோர்
கோமா னுரைத்தவுரை நாவால் வழுத்துகளி
கூர்வார் முழக்கமொருசார். (௬௬)

220 ஓவா நலப்புலமை வானோர் வழுத்தமறை
யோர்தாம் வளர்க்குமொளிதாய்
மூவா ரழற்குணவு கூர்வாழ் வுடைச்சமிதை
மூளா வுயிர்த்தபுகைசூழ்
காவார் நிழற்பலவின் மீதாய் மதுக்கருவி
காணாது மொய்த்ததெழிலார்
மீவா னகட்டுமழை யூடே பொடித்தமதி
மேய்வாழ் வளிப்பதொருசார். (௬௭)

221 தேமா மாச்செறிவி னூடே யுகுத்தகவி
தேனு ளொழுக்கினுடனே
பூமாரி யிற்றனிசெய் தேனாறு நற்பொருநை
போலா யதிற்படியவே

[பி-ம்.] [1]கவைஞர், ச.

வாமா ணிழைப்பருவ மானார் குலப்புதல்வர்
வாடா நலக்கொழுநன்மார்
தாமா தரித்துநுகர் வான்மா ளிகைப்பாணி
சால்பா னிறைப்பரொருசார். (௬அ)

222 பீடார் முடப்பலவின் மூடாழ் குடக்கனிகள்
பீறு மதுச்சுளைபரீஇ
மோடார் பொழிற்கடுவன் யூகா னனத்திலுற
மோகா திகத்தெறியவே
மாடார் வயக்கடுவன் யூகா னனத்திலுற
வாதாய தக்கடுவனோ
டோவ மற்றையதன் யூகா னனத்தெறிய
வோயா துதைப்பரொருசார். (௬௯)

## வேறு.

223 மூருக ருப்பொழில் சூழ்ந்தபன் மாளிகை முகட்டி
லூருவ வெண்பொனு லமைத்தமா ருதிசிலை யுவந்தே
மருவ ருப்பல வினக்கனி வானரந் திருத்திப்
பருகு வாயெனப் பளித்திரத் தருச்சனை பயில்வ. (எ0)

224 விலங்கல் சேர்ந்து[1]வன் பறவைக ளாசெனு விரைந்தே
கலங்க லார்கலி கடந்திலங் காபுரி கதவிப்
புலங்கொ ளாழியுய்த் தருளுமை புலவர்போற் றுதல்கேட்
டிலங்கு கொம்பர்நின் றுடுவ வானரத் தினமே. (எக)

225 அரும்ப சிக்கினி வேண்டுவ தருந்தென வனுமன்
விரும்பு நன்கனி யுண்டபின் விரைந்தமர் விளைப்பான்
பெரும் பணைக்குல மொடித்திடி யேற்றொலி பெருக்கி
யிரும்பி னுங்கடி தாயதோர் மராமர மெடுத்தே. (எஉ)

226 காட்ட முற்றிடு பொழுதினின் மறலியு நடுக்குற்
றோட்ட [2]முற்றிடச் சமர்முகத் துழக்குகிங் கரனை
வேட்ட முற்றுயி ருண்டனெ னனுமுரை வியந்தே
கோட்ட கத்துநின் றுடுவ கோடரக் குலமே. (எ௩)

[பி-ம்.] [1]வண். சா. [2]முற்றதச். சா.



227 பம்பு மார்கலி யெனப்படர் படையுடைப் பணைக்கைச்
சம்பு மாலியைக் கொன றுயிர் சண்டன்வாய்ப் படுத்திச்
செம்பு லால்பருந் துண்ணவென் றனனெனத் தெழித்தே
கொம்ப ரிற்குனித் தாடுவ கோடரக் குலமே. (எச)

228 மலைவலத்தினு மிடத்தினும் வருத்ததாட் டுணைத்தாய்க்
கொலைவ லத்தகைப் படைபடைத் தனையவாய்க கொலைகூர்
தலைவ ரைத்[1]தலை வரைதுமித் தனனெனுஞ் சமர்கேட்
டுலைவில கொம்பர்நின் றுடுவ வானர முவந்தே. (எரு)

229 காய்த்த கைப்படை யக்கனைக் கைத்துணைப் படையான்
மாய்த்த தன்றியும் வச்சிர யாக்கையை மண்ணிற்
றேய்த்த நன்கதை கேட்கவே சினைகளிற் கனிதேன்
றோய்த்த ருந்திநின் றுடுவ வானரத் தொகையே. (எ௬)

230 ஊழு முண்டென விராவணி யொடும்பொரு துடன்போய்த்
தாழும் வாய்மையற் றுத்தரந் தசமுகற் குணர்த்தி
யேழு மாமதி லிலங்கையு ளெரிவிளைத் ததன்பின்
னூழு மார்கலி யடல்கேட் டாடும்வா னரமே. (எஎ)

231 கண்ட னன்றிரு மகளையென் றுரைத்தருட் கடல்கைப்
பண்ட ளித்ததே சுடையரு ளாமணிப் படலம்
வண்ட மிழ்ப்புல மையர்வடித் துரைப்பமா ருதிரான்
றெண்டு பூண்டுநின் றுடுமக் கவிக்குலத் தொகையே. (எஅ)

232 சேட்ட முற்றதோர் சென்னியிற் பெருவரை திரண்ட
தோட்டுணைத்தலத திருவரை வால்களிற் றுடக்கிக்
கூட்ட முற்றபல் கருவரை குரம்புசெய் நளன்கை
காட்ட வீழ்ந்ததைக் கேட்டுநின் றுடுமக் கவிகள். (எ௯)

233 மூத்த துக்கிளை யவனொடுந் தெசமுகன் முதலோள்
வித்த கச்செருத் துடங்கிடை மாருதி விரைந்தே
மத்த வெங்கரி மருப்புக வரக்கர்கோன மார்பிற்
குத்தி னனெனக் குதித்திடும் வானரக் குலமே. (அ0)

[பி-ம்.] [1]தலை துமித்தன னெனுஞ்சம ரங்கேட். ச.

231 சலத்தின் மேற்படர் நிருதர்கோன் றேரின்மேற் சமர்க்கப்
புலத்தின் மேலிடங் கொளநிலம் படர்புனி தனைத்தோள்
வலத்தின் மேற்கொளு மாருதி யென்னவா கனமாங்
குலத்தின் மேற்படுங் குலமெனக் குதிக்குமக் குலமே. (௮௧)

235 கண்ணிற் காண்பதோர் வானரங் காற்றினெங் கடுந்தேர்
விண்ணிற் பேர்தொரு மிராகவ னுயர்ந்திட மேலா
யெண்ணிற் போய்வருங் கூற்றமென் றேத்தமற் றவனும்
மண்ணிற் போந்தவ னுரைத்ததற் றூடும்வா னரமே. (௮௨)

236 பத்து டைத்தலைப் பதகனுக் கிளையவன் பணித்த
முத்த லைப்படை பருதிசெய் முன்னர்முன் னதும்வன்
கைத்த லத்தினிற் பிடித்து நூ றுக்கிய கதைகேட்
டத்த லத்தொரு தலையதா யிருதலை யாடும். (௮௩)

237 எதிரி லாவதி காயனே டிலக்குவ னெதிரா
ளதிரும் வானிடி யேறென விடையில்வந் தடர்ப்ப
முதிர்சி னத்ததே வாந்தகன் முரணலுந் தேர்மேற்
சதிர்பெ றக்குதித் தவனதாந் தனுவிறச் சமைத்தே. (௮௪)

238 எறிந்த தோமரத் தினைப்பிறி தோர்மரத் தெற்று
மறிந்து சாரதி மணிமுடி மறிந்தது தேரொன்
றறிந்து சூலம தெடுத்தவ னெடுத்தகை யதனின்
முறிந்த தப்படை முறிந்தபின் பவனையு முடிப்ப. (௮௫)

239 கண்சிவந்தழன் றெதிரதி காயனைக் கணியா
தொண்சி னத்திரி சிரத்தனை யழையென வுடக்கி
மண்டு தேர்மிசை பாய்ந்தெடுத் தவன்றனை மண்மேற்
பண்ட ரைத்ததுங் கேட்டுநின் றூடுவ பதிந்தே. (௮௬)

240 கூற்றி னேடிகல் கும்பனைக் குறைத்துயிர் குடிக்க
வாற்ற லானெனுங் [1]குரக்கினுக் காசினோ டமர்க்கென்
றேற்ற தோர்நிகும் பனைத்தடித் தமரினுக் கெதிர்ந்த
மாற்ற மேபயி லங்கதன் மார்பிலம் மறவோன். (௮௭)

[பி-ம்.] [1]குரங்கினுக். சா.



241 விடுத்த சூலமாங் கவன்றன்மார் பினில்விழா முன்னர்
தடுத்து துண்டுகள் படுத்தவ னுயிரினைச் சமன்கைக்
கொடுத்து மாருதி வென்றவக் கதைவாக் குறித்தே
யடுத்து நின்றெழுந் தாடுவ பாடுவ வவையே. (௮௮)

242 காமத் தீயினில் வெந்தவ னேவலிற் கலந்த
தூமக் கண்ணன தாழியத் தேரினைத் துமிப்பப்
பூமிக் கேவிழ வுதைத்தவன் றலையினைப் போக்குஞ்
சேமப் போரையுங் கேட்பதோ டாரிமத் திரளே. (௮௯)

243 தலைவ ரைவரும் பொருகளத் தனுமன்வெஞ் சமன்போன்
மலைவ தாநிலை யகம்பனு மடங்கல்போன் மதர்த்த
தொலைவில் வில்வளைத் தடுசர மாரியைத் துமிப்பக்
கொலைவன் மாமரஞ் சுற்றியங் கவற்றையுங் குறைத்தே. (௯0)

244 மண்டு தேரொடுஞ் சாரதி புரண்டிட வயிரத்
தண்டி னெற்றவுந் தண்டுகொண் டதனையுந் தடியக்
கண்ட காலையின் மல்விளைத் திடவெறுங் கையினைக்
கொண்டு வாய்வழி யுதிரவா றொழுகிடக் குத்தா. (௯௧)

245 மற்ற வன்றடுத் தெதிரெதிர் குத்தவா னிடியே
யற்ற தாமெனக் கருவரை யிருசெவி யுறவே
யெற்றி னுனுயிர் விட்டன னகம்பனென் னவுமக்
கொற்ற வன்புகழ் கேட்டுநின் றூடுமக் குலமே. (௯௨)

246 அஞ்சி நீங்கிய விராவணி யடன்மகோ தரனால்
வஞ்ச வெஞ்சமர் விளைத்தபின் வானிடை மறைந்தே
கஞ்ச நான்முகன் படையினைத் தூர்ந்தநோய் களைவான்
றஞ்ச மாமெனச் சாம்பனன் றறைந்ததைத் தரித்தே. (௯௩)

247 கருத்தே னுவிசைத் திமயமா தியவரை கடந்தப்
பொருத்த மேருவின் மருத்துமா மலையினைப் பிடுங்கி
வருத்த மின்றிவந் துயிரளித் தனனென மதித்தே
நிருத்த மாடின பாடின வானர நிரைத்தே. (௯௪)

248 காலி னன்மகன் மேல்வரு மிளையவன் கண்முன்
வாலி தன்மக னிராவணி முடியினை மறையோர்
நாவின் மேலவற் கடியுறை யாக்குத னவிநீர்
வெலி மாநிலம் புணர்த்துரைத் திடுகதை வியந்தே. (௯௫)

249 கொலைகள் கற்றுய விராவணி கொடுமுடிக் கொற்றத்
தலைக ளத்தினி லற்றிடத் தாதைதன் றனிக்கா
னிலைமை யற்றதென னென்றுமா ருதியுட னிரைத்தொண்
கலைகள் கற்றவ ராமென வினவுமக் கவிகள். (௯௬)

250 சிரங்க ளாயிரங் கரங்களா யிரமுள சிலம்பென்
றுரங்க ளத்திலிட் டிடையிடை தடிப்பவ ருடனே
மரங்க ளுண்டுணக் கனியுள மலையுள வாழ்வா
னிரங்கி வீர்விடு மெனலொடுஞ் சாம்பனே டிசைத்தே. (௯௭)

251 மூல வான்பிலப் படைவரக் குரக்கின முடுகிக்
கூல மேல்வீழ்ந் தோடவு மிருபுயக் குன்றின்
மேல வாய்க்கொளென் றிராமனை வேண்டுமவ் விறலின்
சீல மேதினைக் தனுமனை வேண்டுமெத் திரனே. (௯௮)

252 பிலக்கு லப்படை யிறந்தபின் முன்புபோற் பின்பு
முலக்கு லப்பொரு தோள்வலி யுடன்மருந் துதவி
யலக்க ணுற்றதைத் தவிர்த்தகற் றளவளா யன்பா
லிலக்கு வன்றனைக் கரங்களா லணைத்தணைத் தெடுத்தே (௯௯)

253 மனுகு லத்தினு ளுதித்துளோ ரிழைத்தநல் வரந்தா
னனும னென்றொரு வடிவெடுத் தடைந்தவாற் றவினற்
றனுவ லைத்தமர் முகத்தியாஞ் சயங்கொளத் தடையா
தெனுமனத்தொடு மிராமனை யுற்றபின் பிராமன். (௧௦௦)

254 அன்று நம்வயி னடைந்ததிங் கியாதென வதனை
நின்று சாம்பனுத் துணர்த்தனு னீனிலத் தினிநீ
யென்றும் வாழியென் றுரைத்தமை மனக்கொடுற் றெதிரே
வன்று னைக்கையின் வணக்கலும் வாழ்த்தும்வா னரமே. ( )



255 மூன்னை னாளையிற் றோற்றவன் கிளையொடு முடிந்த
பின்னை னாளிறந் ததனையே பேருல கின்ற
வன்னை யின்புற வுரைத்தனன் கதைவர வழியா
மன்னை வாழியென் றுடலிற் பாடும்வா னரமே. (௧௦௨)

வேறு.

256 திருந்து கற்புறை திருவடி தொழவசந் தனுமெய்தா
விருந்தி னுக்குவந் திருந்ததை விரைந்துவெவ் வழல்கையா
லிருந்தை யாக்கிய பின்பா தனுக்குரைத் திறைப்போதின்
அருந்து முன்பில்வந் தவனெனக் களிதரு மவைதாமே. (௧௦௩)

257 திருத்தி யாய்வைத்த செழும்பல வின்சுளை சிறப்பாய்வைத்
தருத்தி யாயருத் தியபினர் யாவையு மவைதுய்ப்பான்
மருத்து மாமலை கொணர்ந்தவன் போல்வயின் வயினுய்த்தே
கருத்தி னுற்றொரு சுளையினைத் தற்றமோர் கவிதானே. ( )

258 மூனிவ ரைங்கமை விருந்தினை யிராமனே முதல்யாரு
மினிநி னுண்டெழுந் தபோத்திமா நகர்புக விருதாள்வீழ்
புனித னாகிய பாதனை யெடுத்துமார் புறப்புல்லிப்
பனிம லர்க்கணீர் துடைத்தநற் றுயரைப் பணித்தேத்தி. ( )

259 தம்பி மாரொடுஞ் சனகனன் மகளொடுந் தனுராம
னம்பொன் மாளிகை புகுதலும் வசிட்டன்வந் தனனுகிச்
செம்பொன் மாமுடி சூட்டவே குருவொடுந் தெரிந்தோது
மும்பர் போற்றுநாட் கலசநீ ராட்டுதற் குரித்தாகும். (௧௦௬)

260 தெண்டி ரைக்கட லேழினுந் தீவினுஞ் செறிதீர்த்தங்
கொண்டு வந்தரு ளனுமனன் றரியணை குளிர்செம்பொன்
மண்ட பத்தினி லமைத்திட மவுலிசூ டினனென்னக்
கண்டு நின்றவர் போற்கவிக் குலங்களுங் களித்தாடும். (௧௦௭)

வேறு.

261 பார மேருவிற் பணைத்தெழு மாளிகைப் பாப்பிற்
றூர மெய்யுறத் தழுவிய நின்னையுந் தகைசால்
வீர மேதினி வித்தகப் பிரமசா ரியெனும்
வாரம் யாதெனத் துதித்தும்வா னரங்களே மதித்தே. (௧௦௮)

262 அவிசொ ரிந்தம ருக்கா சானவ னருணூல்
செவிதொ றுஞ்செலக் கற்றளித் ததமலாற் றிரைசூழ்
புவிபு கழ்ந்திடப் புலமைகற் றவற்றொடும் புனிதர்
கவிபெ ரும்பெய ருண்மையாக் கினையெனுங் கவிகள். (௧௦௯)

263 பொலங்கொண் மேருவைப் பொருவுமா ளிகைப்புறத் திறுத்த
கலங்கொள் பாற்கடற் றுயில்பவர்க் கண்டுகா டொறும் வாழ்ந்
திலங்கை வீடணன் புரப்பகண் டிருப்பவோ வெமர்கள்
குலங்கொ ளுயக வுரையெனுஞ் சிலகவிக் குலங்கள். (௧௧௦)

264 செற்ற முற்றிவ ணமனுரு னென்பது தெளிந்து
மற்ற முற்றவே றடுபகை யுறினடர்ப் பதற்கோ
நிற்றன் மாளிகைப் புறத்துலம் பொரநிமிர் தருதோட்
கொற்ற மாருதி யுரையெனுஞ் சிலகவிக் குலங்கள். (௧௧௧)

265 சூழி யங்கரி யுரைத்தகா ரணன்சுடர்த் தொடிகைக்
காழி யன்றளித் தவளதின் னருட்கிலக் காகி
யூழி யூழிதோ றனதுவண் புகழ்செல வுயர்ந்தோய்
வாழி வாழியென் றிறைஞ்சும்வா னரங்கள்வை கலுமே. (௧௧௨)

266 முற்ற வெண்ணிலா முன்றிலின் மாலைவாய் முயங்கப்
பெற்ற மைந்தரு மகளிரும் போறி வினாராய்க்
கற்ற மாகவி களுமல்லா லனுமனை வழிபா
டுற்ற மாகவி களுமென வைகலு முவப்பார். (௧௧௩)

267 செம்பொ னூட்டவ ரமிர்தையிங் ககநளார் சிறந்த
வும்ப ராமெனத் தசும்புக டொறுநிரைத் தொருங்கே
யிம்ப ரார்ந்திடத் தாம்பினுற் றியவென வெழில்கூர்
கொம்பர் தோறுமொண் பலவினுன் றளகுடக் கனியே (௧௧௪)

268 மண்ட லம்புகழ் புறநகர் மைந்தர்மங் கையர்க்கு
விண்ட லர்திகழ் தருவனித் திடவரு மிளிர்பொற்
குண்ட லக்கொளத் தொளிர்வன கமுகினங் குழுமிக்
கண்ட லர்துறை தொறஞ்சொரி பலபழுக் காயே. (௧௧௫)



269 இலகு மாங்கனி யரம்பைபங் கனியழிந் திழியு
நிலவு பானமோ டினியபூ நறைநிரந் தாழு
மலகி லாதன வடிபினிற் பழுத்தவற் றினளாய்ப்
பலவி னொண்கனி யெனத்தகும் பலவினொண் கனியே. (௧௧௬)

270 வடிகொள் வேல்விழி மடந்தையர் மகிழ்நர்வந் துறுவான்
கடிகொள் பன்மலர் கங்குலிற் காவகத் தமைப்பப்
படியு ளாவன நீரிலுண் டாவன பைம்பொற்
கொடியு ளாவன கொம்பர்பூத் துளகவின் கொடுக்கும். (௧௧௭)

271 பூவை மார்புனல் குடைந்துதாழ் குழல்புலர்த் தியபின்
காவை மேயின காலையி லிலதைகள் கவிழ்த்த
கோவை மென்மலர் கவின்செயக் குழகமை வண்ணப்
பாவை மார்குழன் முடித்தவன் குழகெனப் பகர்வார். (௧௧௮)

272 தண்ண றுந்தட மாடிய மாதருந் தம்மெய்
கண்ணெ கிழ்ந்தபூந் துகள்படி தலிற்கவி னுறுத்தப்
பண்ண மைந்தமென் மொழிச்சில தியர்கடாம் பசும்பொற்
சுண்ண மப்புவ தெவனெனத் தவிர்வாந் தொழிலே. (௧௧௯)

273 காமர் மங்கையர் புனல்படிந் துலற்றிய கதுப்பிற்
பூம டந்தைகா தலன்றனக் கன்பர்பூ சனைசெய்
சேம மாகிய தீம்புகை யுறச்சில தியர்தாந்
தூம மூட்டுவ தெவனெனத் தவிர்வாந் தொழிலே. (௧௨௦)

வேறு.

274 புலர்ந்த கோதையைச் சூழிய மாக்குகை புனைவாரோ
டலர்ந்த வாஞ்செவிப் பூவென நீலம தமைகாலை
மலர்ந்த பூங்குழ லொளிபதை மறைத்திட மருங்காகக்
கலந்து ளார்செவிப் பூவணி யாததென் கழறென்பார். (௧௨௧)

275 குரும்பை வெம்முலைக் கோதையர் மார்பினிற் கொடிபோல்வார்
விரும்பு மாறணி தும்பியார்த் திடைதரு மிளிர்நீலஞ்
சுரும்பி தாமெனச் சோலையுட் சுரும்பினந் தொடர்காலை
யரும்பு மாலைகொண் டோச்சுவா ரவற்றைபா டவர்மன்னே. ()

276 காலை யிற்புனல் படிந்தவ ணன்பகல் கழித்தார்கண்
மாலை யிற்புனை மாலையிற் றமது பொன் மனைக்கேகச்
சோலை யிற்பெடை வண்டொடுஞ் சுரும்பினந் தொடர்ந்தேகும்
வேலை யங்கவர் மனைப்பொழிற் சுரும்பொடும் விருந்துண்ணும். ()

வேறு.

277 சிறுவி லாடவர் கதிர்புகாப் பொதும்பருட் டேமாத்
துறுக னித்திர ளுடக்கியெய் தோங்கிவீழ் போதிற்
குறுகி வாளியோ டவைகொள்வா னரங்களக் குழகர்
தறுக ணிற்கணை தொடினுமக் கணைகொடு தடுப்ப. (௧௨௪)

278 விற்ப யின்றகை யாடவர் பிறையம்பை விசும்பி
னிற்ப யின்றகோம் பரினிறு லகடுழ வியக்கி
யுற்ப லம்புரை விழியினு ருறுநிலத் தமைத்த
பொற்க லத்தினி னிறைத்ததேன் கொண்டகம் புகுவார். (௧௨௫)

279 நாகத் தும்பரி ளுகம துறநகை மதியி
னாகத் தும்பர்வீ ழமுதமுண் டளியவா னரத்தின
யூகத் தின்குலங் களித்தலி னவற்றையு முவப்பின்
மாகத் தும்பர்வா னரமங்கை மாரெனும் வையம். (௧௨௬)

280 விழித்த கட்குவ ளையின்மிளிர் பொய்கைவெண் டிரைகள்
கொழித்த முத்தினைக் குவித்தகோ தையர்கள்கூ டலின்கட்
சுழிக்க ணக்கது கூடலிற் றணைவர்தோன் றுதல்கண்
டழித்தி டாதகன் றவற்றினை வளைதவழ்த் தழிக்கும். (௧௨௭)

281 தூய பூமுகை யுடைந்துகு நறவினைத் துற்றித்
தாய வாளைகள் கதுவலிற் கமுகெனத் தழைத்த
லைய வான்கரும் பினிற்றொடுத் துளகறு விழிய
வாய்வ ளைக்கையார் சிறுசின்மொண் டுண்குவ ரவையே. ()

வேறு.

282 நெய்யும்வெண் ணெயும்வெண் டயிருமின் பாலு
நியதியு மிருநிலத் திருந்து
பெய்யுமா றெனக் கருணையாற் பசியும்
பிணியு மெய் தியவய லவர்தா



மெய்யுமா றருளிக் கடவுளர்க் குரவோர்க்
குதவியு மிருந்ததாற் செல்வஞ்
செய்யுகற் குலத்தா ராயகோ பாலர்
செல்வமே செறிந்ததெண் டிசையும். (௧௨௯)

283 ஆவினங் குடப்பாற் குளிமுலை மேதி
யாடெனப் பலவகைத் தாய
மூவினத் தாயர் மக்களாய்க் குழூஉச்செய்
முதுகுடிப் பிறந்துளார் மாடங்
காவினம் பின்னைக் களித்திட முன்னைக்
கருங்கடல் வளாகமீ தளித்த
தேவினன் பமைந்த வசோதையான் பாடித்
திகழ்குல மனைகள்போற் சிறப்ப. (௧௩0)

284 மணிநிரை தொடிக்கை யாய்ச்சிய ரெழுவர்
மாசிலாக் கற்பினொன் பதின்மர்
திணிநில மெழுகிப் புனிதநீ ராடித்
திங்கள்வெண் பட்டுடுத் தளிகூ
பூணிகிளர் பூவைப் புதுமலர் புனைந்தே
யக்நிறத் தவனைமூ வினமும்
பிணிபசி யுறாது போற்றியே சூரவைப்
பெருநட நடிப்பவெத் திசையும். (௧௩௧)

வேறு.

285 அயனும் வானுல கடைந்தவா னவர்தமக் கமைந்த
மயனு நேர்வரு சிற்பிக ளுலோகத்தின் மரத்தி
னயன தாமரை மாயனு தியர்தமை நாளுஞ்
செயல் பயின்றுள சிற்பமே சிறந்ததெத் திசையும். (௧௩௨)

286 துன்ப மென்பது கனவினு மனத்துறுத் தொல்சீ
ரின்ப மெய்துவா ரணிவதற் கேந்தெழின் மணியா
னன்பொன் னுலகைத் துளகல னுதயநன் கதிர்போற்
பொன்செய் கொல்லர்பீ டிகைதொறும் வைகலும் பொலிவ. ()

287 உலப்பில் கண்ணுவர் கஞ்சமண் டிலங்களை யுயர்கற்
றலத்து வைத்துறு கருவிபாற் றுக்கொளி தகைசா
லலத்த கைக்கணி கைபர்பல கடம்புரி தாளக்
கலப்பி னொக்கிய வரங்கமா மெனத்திசை கறங்கும். (கஅச)

288 கொன்னு னைத்துளை யூசியிற் பட்டுநூல் கொளுத்தித்
துன்னர் துன்னலி னுறப்பமைத் துளவுருத் தோன்றன்
முன்னு கெர்ப்பகோ ளகையினுட் டிங்களின் முறையே
மன்னி நீணிலத் தடைந்துவாழ் மழவென வயங்கும். (கஅரு)

289 பருத்தி நூலினிற் பட்டுநூ லினிற்றறி பரப்பி
வருத்த மற்றுருத் தொழில்களைத் தவைவளர் மார்க்கங்
கருத்தி னுற்றுள பாக்கடாஞ் சொற்பொருள் களுலத்
திருத்த முற்றசொற் புலவராற் சமைந்தபோற் சிறப்ப. (கஅசு)

290 மெழுகு தோய்த்துள தூரிகை யினிற்பல விம்ப
மெழுதும் வெண்டுகிற் காழியர் மெழுகடைத் தெழில்கூர்
தொழுகு பண்ணிறச் சாயம தூட்டியே யுலர்த்தும்
பழுதில் பன்மா மமார்கற் பகமெனப் பயிலும். (கஅஎ)

வேறு.

291 தலைகு லாயதழை பளக மாகியிடை
தவழு மாமதிய முக முமாய்க்
குலைகு லாயபழ முபய காதினிடு
குழைய தாய்மிடறு மிடறதாய்
நிலைசெய் வாழைமுகை யிணைப யோதரமு
நிகர்வ தாயருகு சலவுநீ
ரலைகொ டாணைநிலை மகள்கு ழாமெனவு
மழகு கூர்வகழ கடலியே. (கஅஅ)

இரண்டாவது:

புறநகர்வாழ்த்துச்சருக்கம் முற்றும்.

---



### ௩. அகநகர்வாழ்த்துச்சருக்கம்.

292 பாசபா ணியனு மயனுமாஞ் சொரூபம்
பயின்றகே சவன்பர னெனுமும்
மூரசநா டொறுமுப் பொழுதமுன் றிலின்கண்
மும்மைநூல் களின்முழங் குவதாய்
உரைசெய்வார் தொகுத்தும் வகுத்தவாய் விரித்த
வுசிதமா கல்லற முழுது
மரசவீற் றிருக்குங் குருகைமா நகரா
மகநக ரினிப்புகழ் வதுவே. (க)

வேறு.

293 மன்னுலகும் பல்லுயிரும் படைப்பதன்முன் பேரண்டம்
வகுத்த மாயோன்
றன்னுலகந் தனக்கமைந்த காந்தியையும் பேரின்பத்
தனையுங் கூறிட்
டுன்னரிய திருவுளத்தாற் றன்னொடுதன் றிருமகட்கு
முலகத் தோங்கு
மின்னுயிர்க்கு நிலைபெறுநீ ணகரெனலாம் படிக்கமைத்த
வியற்கைத் தாமே. (உ)

294 மருந்துளவா னவருலகிற் றனதுலகிற் சிறந்தபெரு
வளத்த வாகித்
திருந்தியவித் திருநகர்கண் டிதற்கிணைகாண் குவலெனவே
தியான மேவி
யிருந்தினவாய்ப் பலபடைத்தந் தணையலவாய்ப் படைப்பினைக்கை
விட்டு மேனாட்
பெருந்தகைநான் முகன்பிரமித் திருந்ததனாற் பிரமனெனும்
பெயர்பெற் றானே. (௩)

295 மறைக்கிழங்கிற் றோன்றிமருங் கூரெனும்பா சடைதழைத்து
மாசி லாதல்
லறக்கொழுந்தா னிறவிநீழற் புகழ்[1]முகுளங் கோட்டிமுழு
வதிர்திக் காய

[பி-ம்.] [1]முகிழங்,

சிறப்புடைகெட் டிகழ்சிசித்து மெய்வேத நறைசாந்து
செய்யாள் வாழ்பொற்
பொறைக்கமல மலர்குருகா புரியெனத்தோன் றியதெனுமிப்
புவன மன்னே.

வேறு.

296 விழுமிதா கியமெய்த் தவமுறு வதற்கு
விழுமிதாம் வழிசொலை யுறுமை
விழுமிதாம் பிறவா நெறியுறு வதற்கு
விழுமிதாம் வழியவா வறுத்தல்
விழுமிதாம் பிரமத் தினையுறு வதற்கு
விழுமிதாம் வழிவிழு மியநூல்
விழுமிதா முத்தி யுறுவதற் கிதுவே
விழுமிதாம் வழியெனு முலகம்.

297 மேலலா தனமே லிருந்தன வெனினு
மேலன வாகுமே மேன்மைச்
சால்புமே யதுகீ ழிருந்ததா மெனினுஞ்
சால்பின்மே லாமெனல் சரதம்
வாலிதா கியநுண் ணறிவுடைப் பிரமன்
வைப்பொடு மரீஇயமே லனவிப்
பாலித னெடும்வீ டளிப்பதற் கொவ்வாப்
பான்மையா லுயர்ந்திழிந் தனவே.

298 இல்லவ ளொடுமில் லறம்புரிந் தமைந்தார்
யாவரும் வேண்டுவ துடனே
நல்லறம் புரியுந் துறவுளா ருலவா
நலனெமக் களிக்கும்வீ டென்பார்.
கல்வியின் றுறைபோய் மாசற வுணர்ந்த
கவிஞருங் கழகமீ தென்பார்
பல்விதப் படவூ தியத்தொழில் பயில்வார்
பயன்றரும் படிவமீ தென்பார்.

59

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் . | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணுநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14 | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திரநூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ௸ ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 29 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.